தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 100/=
இதழ் - 45
22.11.2023



# வடக்கில் முதலீடு செய்வதற்கு சீனா திட்டமிடுவது எதற்காக?

வடக்கில் முதலீடு செய்வதற்கு சீனா திட்டமிடுவது எதற்காக? 02

மற்றவர் அங்கீகாரத்துக்காக நீங்கள் காத்திருக்காதீர்கள் 12

சிறப்பாக முடிவெடுப்பதற்கு உங்களுக்கு என்ன தேவை? 18

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# வடக்கில் முதலீடு செய்வதற்கு சீனா திட்டமிடுவது எதற்காக?



## செல்வின் மரியாம்பிள்ளை சொல்கிறார்

நேர்கண்டவர் - பார்த்தீபன்

"வடக்கில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சீனாவின் தொழிலதிபர்கள் ஆர்வத்தைக் கொண்டிருப்பதாக யாழ்ப்பாணத்துக்கு வந்த சீனத் தூதுவர் சொன்னார். என்ன முதலீடாக இருந்தாலும் தாம் அதில் நேரடியாகச் சம்பந்தப்பட வேண்டும் என்பதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். அதாவது அவர்களுடைய தொழிலாளர்கள், அதிகாரிகள் இதில் நேரடியாக பங்கேற்க வேண்டும் என அவர்கள் விரும்புவார்கள். இதில் பல கேள்விகள் எழும். உண்மையில் அவர்கள் வந்த நோக்கத்துடன் செயற்படுகின்றார்களா அல்லது வேறு நோக்கங்களையும் இணைத்துச் செயற்படுகின்றார்களா என்ற கேள்வி வரும் போது சிக்கல் வரும்" என்று தெரிவிக்கின்றார் சமூக, பொருளாதார ஆய்வாளர் செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை.

வடபகுதிக்கு அண்மையில் விஜயத்தை மேற்கொண்டிருந்த சீனத் தூதுவர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள். இதில் ஒருவராக கலந்துகொண்டிருந்த செல்வின் மரியாம்பிள்ளை அவை தொடர்பாகவும் பொதுவாக எமது பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் "தமிழர் பொருண்மியம்" வார இதழுக்கு அளித்துள்ள நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார். அவரது நேர்காணலின் விபரம் வருமாறு -

**கேள்வி -** யாழ்ப்பாணம் வந்திருந்த சீனத் தூதுவர் முதலீடுகள் தொடர்பாகவும் பேசியிருந்தார்கள். குறிப்பாக, சீனத் தொழிலதிபர்கள் வடபகுதியில் முதலீடு செய்வதில் ஆர்வமாக இருப்பதாகச் சொல்லியிருந்தார்கள். எவ்வாறான திட்டங்களை அவர்கள் மனதில் வைத்திருக்கின்றார்கள்?

**பதில் -** ஆம். தமது முதலீட்டாளர்கள் அவ்வாறான ஓர் ஆர்வத்தைக் கொண்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில், என்ன முதலீடாக இருந்தாலும் தாம் அதில் நேரடியாகச் சம்பந்தப்பட வேண்டும் என்பதைத்தான் அவர்கள் விரும்புவார்கள். அதாவது அவர்களுடைய தொழிலாளர்கள், அதிகாரிகள் இதில் நேரடியாக பங்கேற்க வேண்டும் என அவர்கள் விரும்புவார்கள்.

இதில் பல கேள்விகள் எழும். உண்மையில் அவர்கள் வந்த நோக்கத்துடன் செயற்படுகின்றார்களா? அல்லது வேறு நோக்கங்களையும் இணைத்துச் செயற்படு

கின்றார்களா என்ற கேள்வி வரும்போது சிக்கல் வரும். எனவே, அந்த இடத்தில் நாங்கள் மௌனமாக இருந்தோம்.

அதேவேளையில், எமது உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத் துங்கள் என்ற கோரிக்கையை நாம் அவர்களிடம் முன்வைத்தோம். அதற்கு பின்னர் உங்களைப் பங்காளராக்குவது தொடர்பில் ஆராயலாம் எனக் கூறினோம்.

**கேள்வி -** வடக்கில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டைப் பண்ணைகளின் பின்னணி யில் அரசியல் - புவியியல் சார்ந்த மூலோ பாய நோக்கங்கள் இருப்பதாக நீங்கள் கருதுகின்றீர்களா?

**பதில் -** என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில், இதில் சீனாவின் அரசியல் புவியியல் சார்ந்த விடயங்கள் இருப்பதாக உணரமுடியவில்லை. குறுகிய காலத்துக் குள் பெரிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எமது பேராசைத் தனத்தை அவர்கள் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். இதனால், சீனாவுக்குக் கிடைத்திருக்கின்ற ஒரேயொரு நன்மை என்னவென்று பார்த்தால் அது நாம் இங்கிருந்து அனுப்புகின்ற கடலட்டை யாகத்தான் இருக்கும். ஆனால், அதனை ஆபிரிக்கா, நைஜீரியா உள்ளிட்ட பல நாடு களிலிருந்து சீனா பெற்றுக்கொள்கின்றது. அந்த நாடுகளிலிருந்து பெருமளவுக்கு வரும்போது இலங்கையிலிருந்து சிறிய அளவுதான் சீனாவுக்கு கிடைக்கின்றது. அதனால், இதில் பெரிய பொருளாதார நலன்களும் சீனாவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

**கேள்வி -** இந்தக் கடலட்டைப் பண்ணை கள் பாரம்பரியமான மீன்பிடித் தொழிலை முன்னெடுப்பவர்களை மற்றும் கடல் வளத்தை பாதிக்கும் என்பதில் எந்தளவுக்கு உண்மையுள்ளது?

**பதில் -** ஆம், இந்த கடலட்டைப் பண் ணைகள் வந்தமையால் எமது கடற்றொ ழில் பண்பாடு முற்றாகச் சிதைக்கப்படுகின் றது. அதனை எமது மீனவச் சமூகமும் யோசிக்கவில்லை. அவர்களை இந்த கடலட்டை மாயைக்குள் தள்ளியவர்களும் யோசிக்கவில்லை. இதனால், நாம் இழப் பவை அதிகம். அதனை நம்மவர்கள் புரிந்துகொள்ளாமலிருப்பதுதான் துயரம்.

கடலட்டைப் பண்ணைகளை வர்த்தக நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. நாம் பாரம் பரியமாக மீன்பிடிக்கும் இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் இதனைச் செய்யலாம். அதில் பிரச்சினை இல்லை. ஆனால், கரையோர மீன்பிடிக்குப் பயன் படுத்தப்படுகின்ற இடங்களையெல்லாம் இப்போது கடலட்டைப் பண்ணைகள் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. இதனால், கரையோர மீன்பிடியில் ஈடுபட்டுள்ள பலர் தமது தொழிலை விடவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படுகின்றது.

இரண்டாவதாக, இந்தக் கடலட்டைப் பண்ணைகளுக்காக கடலுக்குள் வேலி போட்டு மின்சார லைட்களைப் போட்டு வைத்துள்ளார்கள். இதனால், கடலுக்குள் உயிரினங்கள் வாழும் சூழல் முழுமை யாக இல்லாமல் போய்விடுகின்றது. கடலட் டைக்கு வெளிச்சம் போடுவதற்கு எந்த சம்பந்தமும் இல்லை. அவர்கள் களவைத் தடுப்பதற்காகத்தான் இவ்வாறு வெளிச்சம் போடுகின்றார்கள். இதனால், மீன்கள் கருக்கட்டுவதற்காக கரைக்கு வரமுடியாமல் போய்விடுகின்றது. இதனால், மீன்வளம் அழிவடைகின்றது. மீன்களின் இருப்பை இதன் கருக்கட்டுவதற்கான வாய்ப்புக்களை இந்த கடலட்டைப் பண்ணைகளில் போடப் படும் மின்சார வெளிச்சம் இல்லாமல் செய்துவிடுகின்றது. அதாவது இதனை அவர்கள் ஓர் அடாவடித்தனமாகத்தான் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது கடல் வளமும், மீன்பிடிப் பண்பாடும், மக்களுக்குத் தேவையான கடலுணவை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் அத்த னையும் தகர்க்கப்படுகின்றது.

**கேள்வி -** அதாவது, பாரம்பரியமாக மீன்பிடிக்கும் இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் இந்தக் கடலட்டைப் பண்ணை களை அமைத்தால் அதிகளவு பாதிப்புக்கள் இருக்காது எனக் கூறுகின்றீர்களா?

**பதில் -** ஆம் நிச்சயமாக. பாரம்பரியமாக மீன்பிடிக்கப்படும் இடங்களைத் தவிர்த்து விட்டு தூர இடங்களில் இவற்றை அமைக் கலாம். அது அவர்களுடைய பிரச்சினை. ஏனெனில், மீன் என்பது ஆரோக்கியமான கடல் புரத உணவு. இவை எமக்குத் தேவையான ஒன்று. கடலட்டைகளை நாம் சாப்பிடுவதில்லை. எமது கடலில் பிடிக்க வேண்டிய மீனை நாம் பிடிக்கா மல், கடலட்டைகளை உற்பத்தி செய்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்கின்றோம்.

**கேள்வி -** கடலட்டைப் பண்ணைக ளைச் செய்பவர்கள் கணிசமான வருமா னத்தைப் பெறக்கூடியவர்களாக இருக்கின் றார்களா?

**பதில் -** முதல் இரண்டு மூன்று தவ ணைகளில் அவர்களுக்குக் கணிசமான வருமானம் கிடைக்கும். ஆனால், அதற்குப் பின்னர் கிடைக்காது. இந்தக் கடலட்டைப் பண்ணைகளின் ஆயுட்காலம் குறைந்தது மூன்று அல்லது நான்கு வருடங்கள்தான். புத்தளம் பகுதியில் இறால் பண்ணைகள் எவ்வாறு உருவாகி அழிந்து போனதோ அது போலத்தான் இதுவும் சில வருட காலத்தில் தோற்றுப்போய்விடும். ஏனென் றால், அதற்கான சூழல் இங்கில்லை. கட லட்டைகள் இயற்கையாக கடலுக்குள் பரந்து வளரக்கூடிய ஓர் உயிரினம். இதனை ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் காணிக்குள் ஐயாயிரம் வரையிலான

> கடலட்டைப் பண்ணைகள் வந்தமையால் எமது கடற்றொழில் பண்பாடு முற்றாகச் சிதைக்கப்படுகின்றது. அதனை எமது மீனவச் சமூகமும் யோசிக்கவில்லை. அவர்களை இந்த கடலட்டை மாயைக்குள் தள்ளியவா“களும் யோசிக்கவில்லை. இதனால், நாம் இழப்பவை அதிகம். கடலட்டைப் பண்ணைகளை வர்த்தக நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதில் ஆட்சேபனை இல்லை. நாம் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் இடங்களைத் தவிர்த்து வேறு இடங்களில் இதனைச் செய்யலாம். அதில் பிரச்சினை இல்லை...

கடலட்டைகளை வளர்ப்பதென்பது மிகவும் செயற்கையானது. எனவே இது இரண்டு தடவைகளுக்கு மேல் வெற்றியடைய முடி யாது. அப்படியான நிலையில் பின்னர் இந்த கடலட்டைப் பண்ணையாளர்கள் காணாமல் போவார்கள். அதேவேளையில், இந்தக் கடலட்டைப் பண்ணைகளால் கட லுக்குள் இருந்து வெளியேறிய கடற்றொழி லாளர்கள் மீண்டும் பழைய இடங்களுக்கு வரமாட்டார்கள்.

இதனால் எமது கடற்பொருளாதாரமும், கடற்றொழில் பண்பாடும் ஒட்டு மொத்தமாக சிதைக்கப்பட்டு நாங்கள் கடலுக்கும் கடற் கரைக்கும் சொந்தமில்லாதவர்களாக மாறிப்போவோம்.

**கேள்வி -** அதாவது நிரந்தரமற்ற ஒரு வருமானத்துக்காக இவர்கள் வீணாக ஒரு முதலீட்டைச் செய்கின்றார்கள் என்று குறிப் பிடலாமா?

**பதில் -** நிச்சயமாக. பேராசைதான் இதற்குக் காரணம். குறுகிய காலத்துக்குள் அதிக இலாபத்தை உழைக்கலாம் என இவர்கள் முற்படுவதுதான் இதற்குக் காரணம்.

**கேள்வி -** இந்திய மீனவர்களின் ஊடு ருவால் வடபகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். இது ஒரு சர்ச்சை யையும் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஏற் படுத்தியிருக்கின்றது. இந்தப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வைக் காணமுடியும் எனக் கருதுகின்றீர்கள்?

**பதில் -** இழுவைப் படகு என்ற விவகாரம் சுற்றுச்சூழல் ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் மறுக்கப்பட்டது. அதனைச் செய்யக்கூடாது என்பது தீர்மானிக்கப்பட்ட விடயம். இலங்கையிலும், இந்தியாவிலும் அவ்வாறான ஒரு நிலைமைதான் இருக்

(06ஆம் பக்கம் பார்க்க)

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# பணவீக்கத்தின் விளைவுகள்

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, வானளாவிய பணவீக்கத்தால் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் அதிகரிப்பு, மக்களின் அன்றாட வாழ்க்கையையே கடினமாக்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த பட்ஜெட் இதற்கான எவ்வொரு தீர்வையும் தரவில்லை.

பணவீக்கம் சாதாரண மக்களின் வாங்கும் சக்தியைக் குறைத்து, அவர்களது வீட்டுச் செலவுகளைப் பற்றி கடினமான தெரிவுகளைச் செய்யும் நிலைக்குத் தள்ளியுள்ளது. உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. சில முக்கியப் பொருட்கள் இரட்டை இலக்கப் பணவீக்கத்தைக் கண்டன. இது வீட்டு வரவு செலவுத் திட்டங்களில் கடினமான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் தங்கள் வருமானத்தில் கணிசமான பகுதியை உணவுக்காக செலவிடுகின்றனர். இப்போது அதற்கு கூட பணம் இல்லாத நிலைமையில் பல குடும்பங்கள் இருப்பது வெளிப்படை. பாடசாலைகளில் அதிகரித்துள்ள இடை விலகல் இதன் பிரதிபலிப்புக்களில் ஒன்று. சில பாடசாலைகளில் இலவச மதிய உணவு வழங்கப்படுவதுதான், குறிப்பிட்ட தொகையான மாணவர்களை தக்கவைத்துள்ளது.

அதிகரித்து வரும் செலவுகளை சமாளிக்க பல குடும்பங்கள் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வை குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்கள் உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றுக்கான செலவைத்தான் குறைத்துள்ளார்கள். இது ஊட்டச்சத்து குறைபாடு, சுகாதார அபாயங்கள் மற்றும் குழந்தைகளுக்கான கல்வி பின்னடைவு போன்றவற்றுக்கு வழிவகுக்கிறது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவும் பலரை கடனில் தள்ளியுள்ளது. அத்தியாவசியத் தேவைகளை வாங்க முடியாமல் திணறி வரும் நிலையில், கடன் மற்றும் நகைகளை அடகு வைத்து தங்கள் செலவுகளைச் சமாளிக்கின்றனர். இது அவர்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிப்பதோடு, வாழ்க்கையை இன்னும் கடினமாக்குகிறது. அத்துடன் அவர்களை நிரந்தர கடனாளகளாக்குகின்றது.

பொருளாதார நெருக்கடியும் அதனுடன் இணைந்த பணவீக்கமும் இலங்கையர்களின் மன நலனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நிதி குறித்த நிலையான கவலை, வேலைகளை இழந்து விடுவோமோ என்ற பயம், மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு வழங்க இயலாமை ஆகியவை பரவலான மன அழுத்தம், பதட்டம் மற்றும் மனச்சோர்வை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணவும் பணவீக்கத்தினால் ஏற்பட்டுள்ள துன்பங்களை போக்கவும் அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்தவும், ஊதியத்தை அதிகரிக்கவும், மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு சமூக பாதுகாப்பு வலைகளை வழங்கவும் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## மட்டுவின் 3 தூண்கள்

மட்டக்களப்பு பொருளாதாரத்தின் மூன்று தூண்கள் என்ற தலைப்பில் கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த பா.அரியநேத்திரன் எழுதிய கட்டுரை, மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமைமிகு பொருளாதாரத்தை படம்பிடித்துக் காட்டியது. மூன்று விடயங்கள் தொடர்பாகவும் அவர் விளக்கமாகக் கூறியிருந்தார். ஆனால், திட்டமிட்ட சிங்கள ஆக்கிரமிப்பினால் இந்த மூன்று விடயங்களுமே தற்போது ஆபத்தான நிலையில் இருப்பதுதான் கவலைக்குரியது. எமது அரசியல் தலைவர்கள் இதனை உணர்ந்து உடனடியாகச் செயற்படாவிட்டால், திருகோணமலைக்கும், அம்பாறைக்கும் ஏற்பட்ட நிலைதான் மட்டக்களப்புக்கும் ஏற்படும் என்பதைத்தான் இந்தக் கட்டுரை உணர்த்துகிறது. கட்டுரையாளருக்கு நன்றி!

**எம்.ரமேஷ்காந், வாழைச்சேனை.**

## தபால் நிலைய விற்பனை

சர்ச்சையை ஏற்படுத்திய தபால் நிலைய விற்பனை என்ற கட்டுரை, பொருளாதார நெருக்கடியால் தேசிய சொத்துக்கள் பலவற்றை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் எந்தளவுக்குத் தவறானது என்பதை வெளிப்படுத்தியது. நுவரெலியாவிலுள்ள தபால் நிலையம் எந்தளவுக்கு தொல்பொருள் என்ற ரீதியிலும், உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கான ஒரு கட்டிடம் என்ற ரீதியிலும் பெற்றுள்ள வரலாற்றுப் பெருமையை கட்டுரை வெளிப்படுத்தியது. தனியார் நிறுவனங்களுக்கு இவ்வாறானவற்றை விற்பனை செய்வதற்கு முன்னதாக அரசாங்கம் சம்பந்தப்பட்டவர்களின் ஆலோசனைகளைப் பெறுவது அவசியம். அதனை அரசாங்கம் தவிர்ப்பதுதான் பிரச்சினைகளுக்குக் காரணம்.

**எஸ்.தம்பிராஜா, காரைநகர்**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------
**முகவரி** - ----------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------
**செலுத்திய தொகை** - ----------------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,67,150 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,82,300 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** பொருளாதாரக் குற்றங்களுக்காக முன்னாள் ஜனாதிபதிகள் இருவரையும் நிதித்துறையைக் கையாண்ட அதிகாரிகள் சிலரையும் உயர் நீதிமன்றம் குற்றவாளிகளாக இனங்கண்டிருக்கின்றது. ஆனால், அவர்களுக்கு எந்தத் தண்டனையும் விதிக்கப்படவில்லை. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**ரி.சற்குணம், நெல்லியடி.**

**பதில் -** சம்பந்தப்பட்டவர்களுக்கு 1,50,000 ரூபா தண்டப்பணமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனைவிட அவர்களுக்கு எந்தவிதமான தண்டனையும் இல்லை. இது பலருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பது உண்மைதான். அவர்களுடைய குடியுரிமை பறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. நாட்டு மக்கள் அனைவருக்குமே அவர்கள் இழப்பீட்டைக் கொடுக்க வேண்டும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், இலங்கையில் நிதி முறைகேடுகள் மற்றும் பொருளாதாரத்தின் தவறான நிர்வாகத்திற்கு காரணமானவர்களுக்கு எதிரான அடிப்படை உரிமை மனுக்க ளில் உயர் நீதிமன்ற தீர்ப்பு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார எதிர் காலத்தில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு முக்கிய தீர்மானமாகும்.

முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல முன்னாள் அரசாங்க அதிகாரிகள் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மற்றும் மக்களின் நம்பிக்கையை மீறியுள்ளனர் என்று நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று கோரி வருபவர்களுக்கு இது ஒரு பெரிய வெற்றியாகும், மேலும் இது பொறுப்பானவர்களுக்கு எதிராக மேலும் சட்ட நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு இலங்கையின் ஜனநாயகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க முன்னோக்கி ஆகும். நீதித்துறை சுயாதீனமானது மற்றும் மிகவும் சக்திவாய்ந்த நபர்களைக் கூட அவர்களின் செயல்களுக்குப் பொறுப்பேற்கத் தயாராக உள்ளது என்பதை இது காட்டுகிறது. அரசியல் ஸ்திரமின்மை மற்றும் ஊழல் நிறைந்த நீண்ட வரலாற்றைக் கொண்ட நாட்டிற்கு இது ஒரு முக்கியமான ஒரு மைல் கல்!

இந்த தீர்ப்பு இலங்கையின் பொருளாதாரத்திலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். நெருக்கடிக்கு காரணமானவர்களை பொறுப்புக்கூற வைப்பதன் மூலம், பொருளாதார சீர்திருத்தத்தில் நாடு தீவிரமாக உள்ளது என்ற செய்தியை நீதிமன்றம் அனுப்பியுள்ளது. இது மிகவும் தேவையான வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் மற்றும் பொருளாதாரத்தில் நம்பிக்கையை மீட்டெடுக்க உதவும்.

எவ்வாறாயினும், நீதிமன்றத்தின் தீர்ப்பு பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான செயல்முறையின் ஆரம்பம் என்பது குறிப்பிடத்தக்கது. நெருக்கடியின் அடிப்படைக் காரணங்களான அதிக அளவு கடன் மற்றும் பொருளாதார பன்முகத்தன்மை இல்லாமை போன்றவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கம் மேலும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நெருக்கடியின் தாக்கத்திலிருந்து மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அது செயல்படுத்த வேண்டும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இலங்கைக்கு சாதகமான வளர்ச்சியாகும். நாடு சரியான பாதையில் நகர்கிறது என்பதன் அடையாளம், அது நாட்டு மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கும் என நம்பலாம்.

**கேளுங்கள் தருகின்றோம்**

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 300/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 600/= |
| தக்காளி | - 350/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 140/= |
| கோவா | - 350/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 100/= |
| புடோல் | - 250/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 380/= |
| பெரிய வெங்காயம் | - 300/= |
| பாகற்காய் | - 600/= |
| வெண்டிக்காய் | - 300/= |
| கருணைக்கிழங்கு | - 150/= |
| பயற்றங்காய் | - 600/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 250/= |
| கறிமிளகாய் | - 600/= |
| முருங்கைக்காய் | - 450/= |
| போஞ்சி | - 450/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 208/= |
| கனடா டொலர் - | 234/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 349/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 238/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 399/= |
| சுவிஸ் பிராங் - | 361/= |
| அமெரிக்க டொலர் - | 323/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 218/= |
| கனடா டொலர் - | 245/= |
| சீன யுவான் - | 47/= |
| யுரோ - | 364/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 248/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 415/= |
| சுவிஸ் பிராங் - | 378/= |
| அமெரிக்க டொலர் - | 334/= |

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. அவ்வாறாக உள்ள நிலையில், இழுவைமடி மீன்பிடி முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும்.

இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான மீன்பிடிப்படகுகள் அதிகூடிய குதிரை வலு கொண்ட இயந்திரங்களுடன் பாரிய இழுவை மடி வலைகளைப் போட்டு இழுக்கும் போது கடலின் அடியிலுள்ள அவ்வளவு உயிரினங்களும், வளங்களும் சிதைக்கப்படுகின்றது. அதாவது ஒரு மைதானத்தின் அளவு பிரமாண்டமானதாக அந்த வலைகள் இருக்கின்றன. அத்துடன் அவர்கள் அவற்றைப் பயன்படுத்தும் போது எமது மீனவர்களின் சிறிய வலைகள் அறுக்கப்படுகின்றன.

இந்த இழுவை மீன்பிடித் தொழில் சட்டத்தின் மூலமாக முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. அதனை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். முதலாவதாக, இழுவை வலைப்படகை முற்றாக தடை செய்ய வேண்டும். இரண்டாவதாக, இந்த மீன்பிடிப் பிரச்சினைக்கு இந்திய மீனவர்களுடன் ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட முறைகள் மூலமாக இரு நாட்டு மீனவர்களும் எவ் வாறு மீன் பிடிக்கலாம் என்பது தொடர்பில் உடன்பாடு ஒன்றுக்கு வர வேண்டும். அதனைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

**கேள்வி –** சட்டவிரோதமான மீன்பிடி முறைகள் தொடர்பாகத் தெரிவித்திருந்தீர்கள். அவற்றை கட்டுப்படுத்த அரசாங்கம் தொடர்ந்தும் தவறிவருவதற்கு காரணம் என்ன?

**பதில் –** இங்கு சட்டம் ஒழுங்கு என்பது பெரிய கேள்விக்குறியாகத்தானே இருக்கின்றது! சட்டம், ஒழுங்கு இந்த நாட்டில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதாக இருந்தால், இந்த நாட்டில் போதைப் பொருள் இருக்காது. கள்ளக் கடத்தல் இருக்காது. பாதுகாப்பான ஒரு நாடாக இது இருக்கும். ஆனால், அவ்வாறான ஒரு நிலைமை இங்கில்லை. காடுகள் அழிக்கப்படுகின்றன. கனிம வளங்கள் அகழப்படுகின்றன. சட்டம் என்பது இங்கு பெயரளவுக்குத்தான் இருக்கின்றது. முதலில் சட்டத்தின் ஆட்சியை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும்.

**கேள்வி –** தமிழ் இளைஞர்கள் பெருமளவுக்கு கடல்கடந்து சென்றுகொண்டிருப்பது நீண்டகால அடிப்படையில் பாரிய விளைவுகளை எமது சமூகத்துக்கு ஏற்படுத்தும் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. இந்த வெளியேற்றத்துக்கு பிரதான காரணங்களாக இருப்பவை என்ன? இதற்கான மாற்றுத் திட்டம் என்ன?

**பதில் –** இவ்வாறு இளைஞர்கள் பெருமளவுக்கு வெளியேறிச் செல்வதென்பது மிகவும் துயரமானது. ஒன்று – இந்தத் தேசத்தின் நிச்சயமற்ற எதிர்காலம். இந்த நாட்டிலுள்ள இளைய தலைமுறையினருக்கு நிச்சயமான ஒரு எதிர்காலத்தைத் தருவோம் என எந்த ஒரு தலைவரும் உறுதியளிக்கத் தயாராகவில்லை. அவ்வாறான ஒரு தலைமைத்துவம் எம்மிடம் இல்லை. அது மிகவும் துயரமானது.

இரண்டாவதாக, முன்னர் பிரித்தானியா போன்ற நாடுகள் இங்கு வந்து எமது வளங்களை அபகரித்தார்கள். இப்போது, எமது தொழிலாளர் வளத்தையும் மூளை வளத்தையும் அபகரிக்கின்றார்கள். அதற்காகத்தான் கிறீன் கார்ட், விசா எல்லாம் கொடுக்கின்றார்கள். இவ்வாறு எமது மனித வளத்தை அவர்கள் கொள்ளையடிக்கின்றார்கள். இவ்வாறு கொள்ளையடிப்பதற்காப் போடுகின்ற வலையில் அகப்பட்டு நாம் வெளிநாட்டுக்குப் போக வெளிக்கிடுகிறோம்.

இதற்காகச் செயற்படும் ஏஜென்ஸிகளும் கோடிக்கணக்கான ரூபாய்களை மக்களிடம் பறித்தக்கொண்டு அவர்களை ஏமாற்றுகின்றார்கள். அல்லது விசிட் விசா ஒன்றை எடுத்துக்கொடுக்கின்றார்கள். இந்த விசிட் விசாவில் சென்றால் அங்கு வேலை எடுக்க முடியாது. அஅத்துடன் மூன்று மாதங்களில் திரும்பிவர வேண்டும். இவ்வாறான மோசடி ஒன்று இங்கு நடைபெறுகின்றது. ஆனால், இதனை நம்புவதற்கு எம்மவர்கள் தயாராகவில்லை. தொடர்ந்தும் ஏமாற்றப்படுகின்றார்கள்.

இந்த விடயம் தொடர்பாக புத்திஜீவிகள், மதத் தலைவர்கள் போன்றவர்கள் மக்களுடன் பேச வேண்டும். ஆனால், அவர்கள் பேசத் தயாராகவில்லை. நாம் எதிர்ப்பு அரசியலைத்தான் செய்து பழகியவர்கள். அதனால், ஆக்கபூர்வமான விஷயங்களைச் செய்வதற்கு முன்னுக்கு வராமல் நாங்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி –** பொருளாதார நெருக்கடியின் பின்னர் முதலீடுகளுக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. எமது புலம்பெயர்ந்த மக்களும் முதலீடு செய்யுமாறு அழைக்கப்பட்டார்கள். அந்த அழைப்புக்காகு சாதகமான பிரதிபலிப்புக்கள் ஏதாவது கிடைத்திருக்கின்றதா?

**பதில் –** புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் இங்கு முதலீடு செய்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளார்கள். அவர்களில் சிலர் இங்கு வந்தும் இருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் விரக்கியடைந்து திரும்பிச் சென்றிருக்கின்றார்கள். அதற்கு காரணம் என்னவென்றால், அரசாங்கம் இவ்வாறு அழைப்பு விடுத்திருந்தாலும் கூட, இங்குள்ள அதிகாரிகள் அதற்கேற்ற வகையில் செயற்படுவதில்லை. இங்கு வந்த பலர் அதிகாரிகள் பலருக்கும் பெருமளவு பணத்தை கையூட்டாகக் கொடுத்து கொடுத்து இறுதியில் விரக்தியடைந்த நிலையில் திரும்பிச் சென்றிருக்கின்றார்கள்.

இந்த நாட்டில் இதற்கான வெளிப்படைத் தன்மை இல்லை. லஞ்சம் கொடுக்காமல் இங்கு ஏதாவது செய்ய முடியுமா எனக் கேட்டுப்பார்த்தால் யாருமே அவ்வாறு சொல்லமாட்டார்கள். பலர் இவ்வாறு வந்து பெருந்தொகையான பணத்தைக் கொடுத்து ஏமாந்து போனார்கள்.

புலம்பெயர்ந்த மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு நேரம் முக்கியம். இங்கு நிற்கும் நாள்களில் இது தொடர்பான வேலைகளை அவர்கள் செய்து முடிக்க வேண்டும். ஆனால், ஒவ்வொரு அதிகாரிகளுக்குப் பின்னாலும் ஓடிக்கொண்டு செல்வதிலேயே அவர்களுடைய காலம் சென்றுவிடுகின்றது.

**கேள்வி –** வடக்கு கிழக்குப் பொருளாதார நிலைமைகளை நன்று அறிந்துள்ளவர் என்ற முறையில், இங்கு எவ்வாறான துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள முடியும் எனக் கூறுவீர்களா?

**பதில் –** நிறைய விடயங்கள் இருக்கின்றது. முன்னர் பொருளாதாரம் என்பது வளம் சார்ந்த பொருளாதாரமாக இருந்தது. அதாவது, இயற்கை வளங்கள் எங்குள்ளதோ அதனைச் சார்ந்ததாகவே கைத்தொழில் முயற்சிகளும் பொருளாதார முயற்சிகளும் இருந்தது. இப்போதுள்ள பொருளாதாரம் தொழில்நுட்பம் மற்றும் அறிவு சார்ந்தது. இப்போது மூலப் பொருட்கள் இடத்துக்கிடம் நகர்த்தப்படுகின்றன. எங்கெல்லாம் மலிவாக தெழிலாளர்கள் கிடைப்பார்களோ அங்கெல்லாம் மூலப் பொருட்கள் நகர்கின்றன. பல தேசங்களுக்குள்ளாலும் அந்த மூலப்பொருட்கள் நகர்ந்து முடிவுப் பொருட்களாகியுள்ளன. அந்த வகையில் எல்லாவகையான வாய்ப்புக்களும் இங்குள்ளது.

மூலப் பொருட்கள் எங்கோ இருந்துதான் வரப்போகின்றது. அதனை நாம் முடிவுப் பொருள்களாக்கப் போகின்றோம். இங்குள்ள வளங்களை வைத்துக்கொண்டுதான் நாம் கைத்தொழில்களை உருவாக்கப் போகின்றோம் என்ற தேவையே இல்லை. தொழில் ஆற்றம் கொண்ட ஒரு சமூகம் எம்மிடம் இருக்கின்றது. மிகப் பெரிய இடம் இருக்கின்றது. நீர்வளம், நிலவளம் இருக்கின்றது. எனவே, எத்தகைய தொழிலையும் நாங்கள் இங்கு உருவாக்கலாம்.

இதனைவிட வட, கிழக்கைப் பொறுத்தவரை காங்கேசன்துறை, திருகோணமலை என இரண்டு துறைமுகங்கள் இருக்கின்றன. இதனைவிட விமான நிலையங்களும் உள்ளன. இவற்றின் மூலமாக மூலப் பொருட்களைக் கொண்டு வருவதும் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதும் மிகவும் இலகுவானது. ஆக, அனைத்து விதமான தொழில் முயற்சிகளுக்கு இந்தப் பகுதி உகந்தது என்பதுதான் என்னுடைய கருத்து.

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே. தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு

**A9** வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஒகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457

---



Global Innovation Challenge

# Global Innovation Challenge நிதியுதவி பெறும் அமைப்புகள்

முதற்தடவையாக **Global Innovation Challenge** என்ற பெயரில் நடத்தப்படும் உலகப் புதுமைப் படைப்புச் சவாலுக்காக நிதியுதவி பெறும் அமைப்புக்களின் விவரங்களை **Citi Foundation** அறிவித்துள்ளது. உலகம் முழுவதும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்கள் எதிர்கொள்ளக்கூடிய சமூக பொருளாதார சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை உருவாக்கும் சமுதாய ஸ்தாபனங்கள் இனங்காணப்பட்டு, அவற்றுக்கு கொடையுதவி செய்யும் முறைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில், **Citi Foundation** இன் நன்கொடையாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் **(UNDP)** 50,000 அமெ. டொலர் நிதியுதவியைப் பெற்றது. இதன் மூலம், தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயத்தை அறிமுகப்படுத்தி, சகலதையும் உள்ளடக்கிய நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகளை பெறக்கூடிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையில் சிறிய அளவில் விவசாயம் செய்யும் பெண்களுக்கு உதவிகள் வழங்கப்படும். இந்த வேலைத்திட்டத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தித் திறனையும், சமுதாயத்தின் மீண்டெழும் திறனையும் விருத்தி செய்யக்கூடிய சுற்றாடல்-நேய விவசாய தொழில்நுட்பங்கள் போதிக்கப்படவுள்ளன.

**UNDP Sri Lanka** அடங்கலாக நிதியுதவி பெறும் ஐம்பது நிறுவனங்களும் முன்னுரிமை அளிக்கப்பட்ட நான்கு துறைகளில் நிகழ்ச்சித் திட்ட உதவிகளைப் பெறவுள்ளன. அவையாவன: உணவை அணுகுதல், உணவு கிடைக்கக்கூடிய தன்மை, கட்டுப்படியான தன்மை, சமுதாயத்தின்மீண்டெழும் திறன். இந்தப் புதுமைப் படைப்புகளில் உணவுக்கான கேள்வியையும் விநியோகத்தையும் நிவர்த்திக்கும் செயலிகளை ஆரம்பித்தல் முதற்கொண்டு புதிய தொழில்நுட்பத்தையும் நகர்ப்புற தோட்டங்களை அமைப்பதற்காக நிலைவேற்றுத்தன்மை வாய்ந்த விவசாய நடைமுறைகளையும் முன்னோடியாக அறிமுகப்படுத்தல் வரையில் பல விடயங்களும் அடங்கும்.

நன்கொடை பெற்ற நிறுவனங்கள் இரு வருட காலத்தில் இலாப நோக்கம் அற்று செயற்படும் **IDEO.org** என்ற இணையவெளி வடிவமைப்பு நிறுவனம் வழங்கும் வசதிகள் ஊடாக ஒரு கற்றல் சமுதாயத்தை அணுகவுள்ளன. இந்த நிறுவனங்கள் ஒரு டிஜிற்றல் தளத்தின் ஊடாகவும், திரட்டப்பட்ட அனுபவங்கள் வாயிலாகவும், ஒருங்கமைவை ஏற்படுத்தி, கற்ற பாடங்களைப் பகிர்ந்து கொண்டு, சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பைப் பெறவுள்ளன.

இது பற்றி **Citi Foundation** இன் இலங்கை உத்தியோகத்தர் ரவீன் பஸ்நாயக்க கருத்து வெளியிடுகையில்: "எமது வாடிக்கையாளர்களினதும், நமது ஒரு பாகமாக பிணைந்துள்ள சமுதாயத்தினதும் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி நோக்கி நகர்வது **Citi** ஐச் சேர்ந்த எமது இலக்கு. நான்கு தசாப்தங்களுக்கு முன்னதாக நாம் இலங்கையில் கால்பதித்த நாள் தொடக்கம் இந்த விடயம் முன்னுரிமை பெற்றிருந்தது". அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், "இலங்கையின் உணவுப் பாதுகாப்பு பற்றிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக விவசாய நடைமுறைகளை நவீனமயப்படுத்தி, நிலைபேறான நடைமுறைகளை ஊக்குவிக்கும் வகையில் இதன் நன்கொடை மூலதனத்தைப் பயன்படுத்த வாய்ப்பு கிடைத்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்," என்று கூறினார்.

**UNDP Sri Lanka** இற்குக் கிடைத்த உதவிகள் பற்றி அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அஸூசா குபோட்டா கருத்து வெளியிடுகையில், "இலங்கையின் சமூக-பொருளாதார நெருக்கடியில் விவசாயத்துறை பெரும் சுமையை எதிர்கொண்டுள்ளது. இத்தகைய பின்புலத்தில், இந்தத் திட்டமானது, வாழ்வாதாரங்களை பன்முகப்படுத்தியும், தொழில் முயற்சியாண்மை நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியும் குறிப்பாக, பெண் தலைமைத்துவ சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை இலக்கு வைத்து துரிதமாக மீட்சி பெறுவதற்குரிய உதவிகளை வழங்குகிறது.

பிராந்திய ரீதியிலும், உள்நாட்டு மட்டத்திலும் **UNDP** இன் நீண்டகால பங்குதாரராக **Citi** திகழ்கிறது. நட்பாக மற்றும் வீடுகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களையும், பெண்களின் வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்துவதன் ஊடாக, உணவுப் பாதுகாப்பை நோக்கிய திசையில் நாடு நகர்த்தப்படுவதை உறுதி செய்வதற்காக இலங்கை அரசாங்கமும், ஏனைய அபிவிருத்தி பங்காளர்களும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உதவி செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்" என்றார்.

**இலங்கையில்,**
**Citi Foundation இன்**
**நன்கொடையாக ஐக்கிய நாடுகள்**
**அபிவிருத்தித் திட்டம் (UNDP)**
**50,000 அமெ. டொலர்**
**நிதியுதவியைப் பெற்றது.**
**இதன்மூலம், தொழில்நுட்பத்தை**
**அடிப்படையாகக் கொண்ட**
**விவசாயத்தை அறிமுகப்படுத்தி,**
**சகலதையும் உள்ளடக்கிய நிதி**
**உற்பத்திகள் மற்றும் சேவைகளை**
**பெறக்கூடிய வசதி வாய்ப்புக்களை**
**ஏற்படுத்துவதன் ஊடாக**
**இலங்கையில் சிறிய அளவில்**
**விவசாயம் செய்யும்**
**பெண்களுக்கு உதவிகள்**
**வழங்கப்படும்.**

# தடம்புரண்டுள்ள பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துமா ரணிலின் பட்ஜெட்?






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 13.11.2023 நண்பகல் 12 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின் கொண்டு வரப்படும் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் நாட்டில் அனைத்து தரப்பினர்களினதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அரசியல் நோக்கங்களுக்காக மாயைகளைப் பரப்புவதை நிறுத்துமாறும், அரசியலை விட நாட்டைப் பற்றி சிந்தித்து நாட்டை உயர்த்துவதற்கு அனைவரும் தம்மை உண்மையாக அர்ப்பணிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

அரச சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்க வேண்டுமாயின் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது நாணயம் அச்சிட வேண்டும் அல்லது கடன் பெற வேண்டும். ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப்படுத்துவது சமவுடைமை கொள்கைக்கு எதிரானது. சம்பளத்தை அதிகரிக்குமாறு ஒரு தரப்பினர் போராடுகின்றார்கள். அரச சேவையாளர்கள் மட்டுமல்ல. ஒட்டுமொத்த மக்களும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். அரச சேவையாளர்களுக்கு ஒரே கட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அரச துறையின் மாதாந்த சம்பளத்திற்காக 93 பில்லியன் ரூபா காப்புறுதி, மருந்துகள், ஓய்வூதியம் உட்பட பொதுநல செலவுகளுக்கு 30 பில்லியன் ரூபா கடன் வட்டி செலுத்த 220 பில்லியன் ரூபா என 03 பிரதான செலவுகளுக்காக மட்டும் அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 383 பில்லியன் ரூபாவை செலவிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டுக்குள் 900 பில்லியன் ரூபாவாக இருந்த வங்கி மிகைப்பற்று 70 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவித்தார். அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% இலிருந்து 15% ஆக அதிகரிக்காவிட்டால் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒரு சில குழுக்களின் எளிய மற்றும் அழகான வாக்குறுதிகளால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது எனவும் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடம் புரண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை கடந்த வருடத்தில் மீண்டும் சரியான பாதையில் தூக்கி நிறுத்த முடிந்ததாகவும் அதற்காக மக்கள் கடுமையாக உழைத்த போதும் சில தரப்பினர் நாட்டை பின்னோக்கி இழுக்க முயற்சித்ததாகவும் குறிப்பிட்டார்.

கற்பனைக் கதைகளால் நாட்டை முன் கொண்டு செல்ல முடியாது எனவும் நீண்டகாலமாக அரசியல் கட்சிகள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளின் இறுதி முடிவு நாட்டை வங்குரோத்து அடையச் செய்ததாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, துரதிஷ்டவசமாக நாட்டில் உள்ள சில தரப்பினர் இதனை இன்னும் புரிந்து கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கடினமான பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால் சிறந்த பொருளாதாரத்தை விரைவில் உருவாக்க முடியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த வருடத்தை திரும்பிப் பார்க்கும்போது நாடு சரியான பாதையில் செல்வது 100% உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதுவரையான பயணத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பாடுபடுவதாகத் தெரிவித்தார்.

பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்கமாக குறைக்க முடிந்ததால் பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து நாட்டை மீட்க முடிந்துள்ளதாக உரையின் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்டெடுப்பது மிகவும் கடினமான செயற்பாடு என்று தெரிவித்த ஜனாதிபதி, ஆட்சியைக் கைப்பற்றும் அரசியல் நோக்கத்துடன் மக்களிடையே நிவாரணம் வழங்கும் கனவு மாளிகைகளை நிர்மாணித்தால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கே தள்ளப்படலாம் எனவும் தெரிவித்தார்.

இதுவரையான பயணத்தின் வெற்றிக்கு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமே காரணம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதன் ஊடாக 2022 ஆம் ஆண்டைப் போன்று பொருளாதார நரகத்தில் வீழ்ந்துவிடாமல் முன்நோக்கிச் செல்வதற்கு அடித்தளமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் நட்டத்தை ஈடு செய்ய அரச வங்கிகளில் தொடர்ச்சியாக கடன்களைப் பெற்று வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த நிலைமையினால் அந்த வங்கிகள் பலவீனமடைந்து வீழ்ச்சியடைவதைத் தடுக்க மக்களின் வரிகளைப் பயன்படுத்த அரசுக்கு நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாரிய அளவிலான குறைந்த செலவில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை பிரதான கட்டமைப்புடன் இணைப்பதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியான தடைகளும் நீக்கப்பட்டுள்ளதாகவும், செயற்திறனற்ற மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக மறுசீரமைப்பதற்கான ஒழுங்குவிதிகள் தற்போது வகுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் வரி விலக்குகள் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு முன்

மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அதன் ஊடாக அரச வருமானம் அதிகரிக்கும் போது அதனை விட அதிகமான வரிச் சலுகைகளை வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

**நிதி ஒருங்கிணைப்பு**

அரசாங்க வருவாயை செலவினங்களுடன் சீரமைத்தல், பட்ஜெட் ஒழுக்கத்தை மேம்படுத்துதல், வருவாய் சேகரிப்பை மேம்படுத்துதல் மற்றும் செலவினங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் இலங்கையில் நிலையான நிதிக் கொள்கையை அடைதல்.

**நிதிக் கட்டுப்பாடு / ஒழுக்கம்**

அரசாங்க செலவுகள் மற்றும் கடன் வாங்குதல் ஆகியவற்றில் உச்ச வரம்புகள் அமுல்படுத்துவதன் மூலம் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்தல் மற்றும் பொது நிதிகளை பொறுப்புடன் நிர்வகிப்பதற்கான கட்டமைப்பை வழங்குதல்.

**பொருளாதார ஸ்திரத்தன்மை**

உட்கட்டமைப்பு, சமூக பாதுகாப்பு கட்டமைப்பு, கடன் மேலாண்மை மற்றும் பணவீக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றில் மிகுந்த கவனம் செலுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, பணவீக்கக் கட்டுப்பாடு மற்றும் நிலையான பொது நிதி ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை அடைதல்.

வரி முன்மொழிவுகள் - வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

1. வருமான வரி

• NGJA – (National Gem & Jewellery Authority) நடத்துகின்ற ஏலத்தில் விற்கப்படும் இரத்தினங்களின் விற்பனை விலையில் 2.5% WHT விலக்கு தொடர்பான சிறப்பு வரி ரிட்டர்ன் (Return) சமர்ப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

• WHT சான்றிதழை நிறுத்தி வைத்திருப்பவருக்கு கட்டணம் வசூலிக்காமல் வழங்கப்பட வேண்டும்.

• குறிப்பிட்ட தகவலைச் சமர்ப்பிக்கும் யூனிட் அறக்கட்டளைகள் (Unit Trusts) மட்டுமே தகுதியான வணிகத்தை நடத்துவதாகக் கருதப்படும்.

• வரிக் கணக்குகள் மற்றும் வரி அதிகாரிகளுக்குத் தேவைப்படும் தகவல்களைச் சமர்ப்பிக்காத நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர சிறப்பு தண்டனை விதிகள் (Special Penal Provision) அறிமுகமாக்கப்பட்டுள்ளன.

• உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (IRA) பிரிவு 18 (நிதிச் செலவின் விலக்கு அளவு), 67 (காப்பீட்டு வணிகம்), 163 (நீதிமன்ற நடவடிக்கைகள்) ஆகியவற்றின் விண்ணப்பத்தின் தெளிவை மேம்படுத்த திருத்தப்படும்.

• வரி தணிக்கைகள் அல்லது நிர்வாக மதிப்பாய்வுகளின் போது சமர்ப்பிக்கப்படாத ஆவணங்கள், இலங்கையில் கிடைக்கப் பெறும் சாட்சியங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் மற்றும் மற்றவர்களுக்கு 9 மாதங்களுக்குள், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் விசாரணையின் போது சமர்ப்பிக்க அனுமதிக்கப்படாது.

• வரி செலுத்துவோர் அடையாள எண்ணின் (TIN) சான்றிதழின் நகலை பின்வருவனவற்றிற்குச் சமர்ப்பித்தல் கட்டாயத் தேவை யாக்கப்பட்டுள்ளது.

a) எந்த வங்கியிலும் வங்கி நடப்புக் கணக்கைத் திறக்கும் போது.

b) விண்ணப்பதாரர் கட்டிடத் திட்டத்திற்கான ஒப்புதலைப் பெறும் பொழுது.

c) மோட்டார் உரிமையாளர் வாகனத்தைப் பதிவு செய்யவும் அல்லது உரிமத்தைப் புதுப்பிக்கும் சந்தர்ப்பத்தில்,

d) நிலம் வாங்குபவரால் அல்லது நிலத்திற்கான உரிமையைப் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில்.

தேவையான வழிகாட்டுதல்கள் கமிஷனர் ஜெனரலால் (Commissioner General) வெளியிடப்படும்.

2. பெறுமதி சேர் வரி (VAT)

• வரி விலைப்பட்டியல் வடிவத்தை (Tax Invoice Format) உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையர் குறிப்பிடும் வகையில் அறிமுகப்படுத்தப்படும்.

• VAT சட்டத்தின் பிரிவு 83 இல் "வரி விதிக்கக்கூடிய காலம்" என்ற வெளிப்பாடு, அனைத்து வரி செலுத்துவோருக்கும் ஒரே மாதிரியான படிவம் (Return) தாக்கல் முறைமை கொண்டதாக வரையறுக்கப்படும்.

• ஜனவரி 1, 2024 ஆண்டு முதல் VAT விகிதத்தை 18%ஆக அதிகரிப்பதாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும்.

• பதிவு செய்யப்பட்ட நபர்கள், பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதில் VAT வசூலை ஆதரிப்பதற்காக, விலைப்பட்டியல் மற்றும் விற்பனைப் பதிவை தானியங்குபடுத்தும் பாயின்ட் ஆஃப் சேல் (Point of Sale - POS) இயந்திரங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுவார்கள்.

3. பிற வரி சீர்திருத்தங்கள்

• இலங்கையில் வருவாய் அதிகார சபையை நிறுவுதல்.

• கலால் திணைக்களம் (Excise Department - ED) மற்றும் சுங்க திணைக்களம் (Customs) ஆகியவற்றின் முக்கிய நிர்வாக செயற்பாடுகளுடன் தொடர்புடைய முக்கிய செயற்றிறன் குறிகாட்டிகள் (KPI - Key Performance Indicators) அறிமுகம் செய்யப்படும்.

• கலால் திணைக்களத் துறைக்கு Revenue Administration System for Excise Department (RASED) வருவாய் நிர்வாக அமைப்பு அறிமுகம் செய்யப்படும்.

முன் பட்ஜெட் வரி முன்மொழிவுகள்

முன் பட்ஜெட் வரி திருத்தங்கள்

• VAT விலக்குகளில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

• பெற்றோல், டீசல், எல்பிஜி (LPG), இரசாயன உரம் போன்றவற்றின் மீதான வாட் (VAT) வரி விலக்குகளை மேலும் நீக்கப்பட்டுள்ளன.

• 01.01.2024 முதல் VAT விகிதம் 18% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

• VAT மற்றும் SSCடுக்கான பதிவுக்கான வரம்பு (Threshold) ஆண்டுக்கு ரூ. 60 மில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளது.

• அனைத்து வகையான சுயாதீன சேவை வழங்குநர்களையும் உள்ளடக்கும் வகையில் சேவைக் கட்டணங்களில் WHT யின் பொருந்தக்கூடிய நோக்கத்தை விரிவுபடுத்துதல்.

• சீனி மீதான எஸ்.சி.எல் (SCL) அளவை கிலோ ஒன்றுக்கு 25 ரூபாயிலிருந்து ஒரு கிலோவுக்கு 50 ரூபாய் மற்றும் அதிகபட்ச சில்லறை விலையை 02.11.2023 முதல் அறிமுகமாக்கப்பட்டுள்ளது.

மேலும்,

டிஜிட்டல் மயமாக்கப்படும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் - 2024 ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் டிஜிட்டல் மயமாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மின்சார பேருந்து - மேல் மாகாணத்தில் இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து 200 மின்சார பேருந்துகளை இயக்கும் முன்னோடி திட்டம் ஆரம்பிக்கப்படும். அத்துடன் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரின் வாகன மற்றும் பயணிகள் போக்குவரத்து நெரிசலை நீக்கி பேருந்து மற்றும் பிற டாக்சிகளை ஒருங்கிணைக்கும் வகையில் உலக வங்கியின் கடனுதவியின் கீழ் 2024 ஜனவரியில் கண்டியில் பல்போக்குவரத்து மையத் திட்டம் ஆரம்பிக்கப்படும். மேலும், இந்த மையத்திற்காக 1.5 பில்லியன் ரூபாய் பாதீட்டில் ஒதுக்கப்படுவதாக என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரவுசெலவுத் திட்ட தொடக்கத்தை நாம் பாராட்டும்போது அதன் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள கூட்டு முயற்சியை அங்கீகரிப்பது அவசியம். நமது நாட்டின் நிதி எதிர்காலத்திற்கான ஒரு விரிவான மற்றும் நன்கு நுட்பமான அணுகுமுறையை உறுதி செய்வதற்காக இணைந்து பணியாற்றியுள்ளது.

இந்த பட்ஜெட் முன்மொழிவு உள்ளடக்கம், நிலைத்தன்மை மற்றும் புதுமைக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது. பின்னணி/சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல் அனைத்து குடிமக்களுக்கும் பயனளிக்கும் வலுவான பொருளாதாரத்திற்கு இது களம் அமைக்கின்றது. முன்மொழியப்பட்ட ஒதுக்கீடுகளை நாம் ஆய்வு செய்யும் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொருளாதார ரீதியில் மட்டுமல்ல, சமூக மற்றும் சுற்றுச்சூழலுக்கும் பொறுப்பான ஒரு தேசத்தை கற்பனை செய்கின்றார் என்பது தெளிவாகின்றது.

**+94-777-802-900**
**Email: swaminathan@agsarma.com**

# மற்றவர் அங்கீகாரத்துக்காக நீங்கள் காத்திருக்காதீர்கள்

நேர்கண்டவர் - பி.பவித்ரா

"நீங்கள் நீங்களாகவே இருங்கள். மற்றவர்களாக வேண்டும் என்று முற்பட வேண்டாம். மற்றவர்கள் ஆயிரம் கதைகள் சொல்லலாம். ஆனால், உங்களுக்கு சரியாகப்படுவதை செய்யுங்கள். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை வாழுங்கள். மற்றவர்களுடைய அங்கீகாரத்துக்காக நீங்கள் காத்திருக்காதீர்கள்" என்று உறுதியாகக் கூறும் துரைராஜா பிரஷாந்தன் KTP Consultancy & Training என்ற நிறுவனத்தின் நிறுவுனர். சுயதொழில் முயற்சி மற்றும் தொழில் துறைகளில் உள்ளவர்களுக்கான பயிற்சியாளராகவும் தொழில்வாண்மை வியாபார, வாழ்க்கை ஆலோசகராகவும் பணியாற்றிவருபவர்.

வடக்கு, கிழக்கில் உள்ள பாடசாலைகள்



மட்டும் என்றில்லாமல் இலங்கை பூராகவும் உள்ள தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் தமிழ் பேசும் ஊழியர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொடர்புடையோர்களுக்கு தொழில்வாண்மைப் பயிற்சிகளையும் (Professional Training) தொழில்வாண்மை வியாபார, வாழ்க்கை ஆலோசனைகளையும் (Professional Business & Life Coaching) தொடர்ச்சியாக வழங்கிவருபவர். இவற்றின் மூலம் அவர்களுடைய முன்னேற்றத்துக்கான வழிகளைத் திறந்துவிடுபவர். பாடசாலைகள் பலவற்றில் இவர் இலவசமாகவே தன்னுடைய பயிற்சிகளை நடத்திவருகின்றார். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழில்துறைகளில் உள்ளவர்களின் திறமையை, இயலளவை



மேம்படுத்துவதற்காகத் திட்டமிட்டுச் செயற்படுபவர்.

"தமிழர் பொருண்மியம்" இதழுக்காக அவரை நேர்கண்டபோது பயனுள்ள பல தகவல்களை அவர் பகிர்ந்துகொண்டார். எமது வாசகர்களுக்காக அவற்றைத் தொகுத்துத் தருகின்றோம்.

**கேள்வி** - சுயமுன்னேற்றப் பயிற்சியாளராகப் பணியாற்ற வேண்டும் என்ற சிந்தனை உங்களுக்கு ஏன் ஏற்பட்டது?

**பதில்** - பத்து ஆண்டுகளாக சிங்கப்பூரில் நிரந்தரவாசியாகப் (Permanent Resident) பணியாற்றிய எனக்கு நம் சொந்த மண்ணில் மனிதத் திறன்கள் (Human Talents) சரிவர வளப்படுத்தப்படாமை பற்றி சில நண்பர்களிடம் இருந்து எப்போதும் ஓர் அங்கலாய்ப்பு. இதன் தொடர் சிந்தனை என்னை இலங்கை வர வைத்தது. பயிற்சிகளை முழுநேரத் தொழிலாக (Full Time Profession) ஆரம்பிக்க வைத்தது.

**கேள்வி** - இந்தப் பணியில் ஆரம்பத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் எவை? அவற்றை எவ்வாறு வெற்றிகொண்டீர்கள்?

**பதில்** - பெருநிறுவனப் பயிற்சி (Corporate Training) மற்றும் சுய முன்னேற்றப் பயிற்சிகள் (Self Motivational Training) பெரும்பாலும் அதிகம் தமிழில் பேசப்படாத காலகட்டத்தில் (2016/17) ஆரம்பித்ததால் மக்களிடையே இப் பயிற்சிகள் பற்றிய போதிய தெளிவின்மையால் அனைவரிடத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்த சிறிது காலம் தேவைப்பட்டது.

டிஜிட்டல் மார்க்கெட்டிங் மூலம் இந்தச் சவாலை ஓரளவு வெற்றிகொள்ளவும் முடிந்தது. பயிற்சி பெற்ற நிறுவனங்கள், தனிநபர்களின் பரிந்துரைகளும் வலுச்சேர்த்தன.

**கேள்வி** - இது தொடர்பான பயிற்சிகளை எங்காவது நிறுவனத்தில் நீங்கள் முறையாகப் பெற்றுக்கொண்டீர்களா? அல்லது நீங்களாகவே உங்களை வளப்படுத்திக் கொண்டீர்களா?

**பதில்** - சிங்கப்பூரில் 2005-2016 ஒரு தசாப்தத்திற்கும் மேலாக Toastmasters ஊடரடி எனும் பேச்சாளர் மன்றங்களில் (அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட Toastmasters International) உறுப்பினராக துடிப்பாக பங்குபற்றி செயற்றிட்டங்கள் பல செய்து விருதுகள் பெற்றமையும் பயிற்சிகள் செயற்றிட்டங்களாக வழங்கியமையும் அங்கும் பகுதிநேரமாக பயிற்சிகளை வழங்க வைத்தது. பின்னர் சுயமாகவும் மற்றும் பன்னாட்டு பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலுடனும் எனது தனித் திறமைகளை மேம்படுத்திக் கொண்டேன். இலங்கையில் பயிற்சியாளர்களது தொழில்வாண்மை நிறுவனமான SLITAD வழங்கும் உயரிய தகைமைச் சான்றிதழ்களை பயிற்சியில் SLTAD Certified Trainer, வழிகாட்டலில் (Coaching) SLITAD Certified Business & Life Coach பெற்றுள்ளேன்.

அவுஸ்திரேலிய - இலங்கை நிறுவனமான Skills for Inclusive Growth (S4IG) மற்றும் இலங்கை கைத்தொழில் வர்த்தக சம்மேளனம் (Federation of Chamber of Commerce and Industries of Sri Lanka FCCISL) இணைந்த அண்மைய மதிப்பீட்டிலிருந்து Master Coach - Professional Business Coaching அதியுயர் மட்ட (Level 3) தகைமையினை பெற்றுக்கொண்டேன்.

**கேள்வி** - உங்களுடைய இந்தத் தொழில் முயற்சிக்கு சமூகத்தின் அங்கீகாரத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள்?

**பதில்** - தமிழில் முழுநேர பயிற்சியாளர்கள்,ஆலோசகர்கள் பற்றாக்குறையாகவே எமது நாட்டில் உள்ளது. அதன் தேவை என்னால் பெருமளவு பூர்த்தி செய்ய முடிந்தது. தனியார், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவற்றிற்கும் பயிற்சி அளித்துள்ளேன். தற்போது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிற்கும் பயிற்சி அளித்து வருகின்றேன்.

சமூக அங்கீகாரத்தினாலேயே இவ்வளவு தூரம் பயணிக்க முடிந்தது. சுமார் ஏழு வருடங்களாக இலங்கையில் முழுநேரத் தொழில்வாண்மை பயிற்சிகளின் அடைவுகளுக்கான சமூக அங்கீகாரமாக கற்றல் மற்றும் மேம்பாட்டுத்துறையில் (Learning & Development) கௌரவ கலாநிதி பட்டத்தையும் பெற்றுள்ளேன். இறையருளால் 576 பயிற்சிகளை 230 நிறுவனங்களுக்கூடாக 38,000ற்கு மேற்

பட்டோருக்கு இன்றைய திகதி (4/11/2023) வரை வழங்கியுள்ளேன் என்பதை தன்னடக்கத்துடன் கூறவிரும்புகின்றேன்.

**கேள்வி -** "வெற்றிக்கான மென் திறன்கள்" (Soft Skills for Success - S3) என்ற தலைப்பிலான உங்களுடைய பயிற்சி முக்கியமாகப் பேசப்பட்டது. இது தொடர்பில் சுருக்கமாகக் கூறமுடியுமா?

**பதில் -** மென் திறன்கள் (Soft Skills) பயிற்சிகளின் மூலம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள பல ஆயிரக்கணக்கான மாணவர்களையும் ஆசிரியர்களையும் வளப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது. பல மாணவர்களதும், ஆசிரியர்களதும், அதிபர்கள், உயர் அதிகாரிகள், துணைவேந்தர்கள் பின்னூட்டத்தை நான் நேரடியாகவே கேட்டுள்ளேன், அவர்களது வாழ்வில் கிடைக்கப்பெற்ற பயனுள்ள பெரும் திருப்புமுனையாக கருதுகின்றனர். எமது சமூக ஊடகங்களில் அவை அவ்வப்போது பதிவேற்றம் செய்யப்படுகின்றன.



இந்த பயிற்சிகளின் விளைவுகளை கண்ணுற்ற பல தன்னார்வலர்கள் அவர்களாகவே முன்வந்து தாங்கள் கல்வி கற்ற பாடசாலைகளுக்கும் இன்னும் பலர் கேட்கும் வளத்தேவையுடைய இடங்களுக்கும் பயிற்சியை வழங்க நிதி அனுசரணைகளை தனியாகவும் சிலர் சேர்ந்தும் வழங்கிவருகின்றனர். இன்னும் பல பாடசாலைகளும் சமூக அமைப்புக்களும் வேண்டினாலும் நிதி அனுசரணைகளுக்காகக் காத்திருக்கின்றேன்.

**கேள்வி -** மென் திறன்களை எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும்?

**பதில் -** பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நண்பர்களுடன்/சக பணியாளர்களுடன் பயனுள்ள விடயங்கள் பற்றி கலந்தாலோசிப்பது, சிறிய இலக்குகளை வகுத்து அதனை செய்து முடிப்பது, பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி யோசிப்பது, தங்கள் செயல்கள் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களை (Receiving Feedback) தங்கள் மேலானவர்களிடம் கேட்பது போன்ற செயல்களின் மூலமும் மென்திறன்களை (Soft Skills) வளர்த்துக்கொள்ள முடியும். தொடர் இற்றைப்படுத்தல் (Update) மாறும் உலகில் இன்றியமையாதது.

கேள்வி - பாடசாலைகளில் தேர்வை இலக்காகக் கொண்டு பாடத்திட்டத்துக்குள்



இருந்துகொண்டு படிக்கும் மாணவர்களுக்கு உங்களுடைய பயிற்சிகள் எந்தளவுக்கு உதவுகின்றன?

**பதில் -** தேர்வை எதிர்நோக்கும் மாணவர்களது நோக்கம் தேர்வில் அதிக அடைவுமட்டத்தை பெறுவதே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எவ்வளவு திறமையாக கற்பித்தாலும் ஒவ்வொரு மாணவர்களினதும் உள்வாங்கும் திறனும் வேறுபடுகின்றது.

அவர்களிற்கு எவ்வாறு படிக்கும் விடயங்களை நினைவில் வைத்திருப்பது, பரீட்சையின் போது மீட்டல் செய்வது போன்ற பல கற்றல், தேர்வு நுட்பங்களை பயிற்றுவிக்கின்றேன். தற்போது புதிய தொரு பயிற்சியை இதற்காகவே சர்வதேச தரத்தில் தமிழில் "கற்றல் தேர்வு நுட்ப ஊக்குவிப்புகள்" (SEMT - Study Exam Motivation Techniques) என்ற தலைப்பில் மூன்று மணித்தியாலப் பயிற்சியாக பங்குபற்றல் அணுகுமுறையில் வழங்கி வருகின்றேன்.

**கேள்வி -** சுயதொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் மற்றும் அரச தனியார் அலுவலகங்களில் பணிபுரிபவர்களுக்கு உங்களுடைய இந்தப் பயிற்சிகள் எந்தளவுக்கு உதவுவதாக இருக்கும்?

**பதில் -** சுய தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அவர்களது விற்பனை, சந்தைப்படுத்தல், வாடிக்கையாளரை கையாள்தல் போன்ற விடயங்களை பயிற்றுவிக்கின்றேன். அரச, தனியார் அலுவலகங்களில் பணிபுரிவோர்கள் எவ்வாறு தமக்கு கொடுக்கப்பட்ட பணிகளை துல்லியமாகவும் உற்பத்தித்திறனுடனும் (Productivity) மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்குகின்றேன்.

**கேள்வி -** வர்த்தகத் துறையில் உள்ளவர்களுக்கு எவ்வாறான பயிற்சிகளை நீங்கள் வழங்குகின்றீர்கள்?

**பதில் -** வர்த்தகத் துறையில் உள்ளவர்களுக்கும் விற்பனை, சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் சேவை போன்றவற்றுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் அவர்களது பொருட்கள் சேவைகளை அறிமுகப்படுத்தி சந்தைப்படுத்துவது, தனி நபருக்கான வியாபார மற்றும் வாழ்க்கை வழிகாட்டல் (Business & Life Coaching) போன்றவற்றை மேற்கொள்கின்றேன். இதனை நேரடியாகவோ நிகழ்நிலையிலோ (Online) பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்வி -** புத்தாக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கக்கூடிய வகையில் உங்களுடைய பயிற்சிகள் அமைந்திருக்கின்றதா?

**பதில் -** ஆம், எனது பயிற்சிகள் மூலம் பல தொழில் முயற்சியாளர்கள் புதிய விடயங்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். தற்போதும் அவர்களுக்கு தொடர் பயிற்சியளித்து அவர்களது செயலாற்றல் (Performance), புலப்படும்தன்மை (Visibility) அதிகரிப்பதை பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

**கேள்வி -** மாணவர்கள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் முன்னேற்றத்துக்கு சமூக வலைத்தளங்கள் பாதிப்பாக இருப்பதாக நினைக்கின்றீர்களா? அவ்வாறாயின் அதனை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? அதற்கான உங்களுடைய உபாயம் என்ன?

**பதில் -** எந்தவொரு புதிய தொழில்நுட்பமும் மக்களுக்கு சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது அனைவரும் அறிந்ததே.

சமூக வலைத்தளங்கள் இன்றைய பல Startups and Corporate நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருகின்றது. அதனை பெரும் சாதகமாகவே நான் பார்க்கின்றேன், இன்றைய இளைஞர்கள் சிலர் சமூக வலைத்தளங்களினூடாக தவறான வழியில் செல்வதும் உண்மையே, அவ்வறான விடயங்களில் இருந்து எம்மைப்பாதுகாத்துக் கொள்வது பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் மற்றும் என்னைப் போன்ற பயிற்சியாளர்களினதும் கடமையே. நான் என்னுடைய பயிற்சிகளில் இவ்விடயங்களை தவறாது கூறுவதுடன் எவ்வாறு சிறப்பாக நல்லவற்றுக்குப் பயன்படுத்தலாம் என்றும் எடுத்துக் காட்டி வருகின்றேன்.

**கேள்வி -** உங்களைப் போல ஒரு ஆலோசகராக, சுயமுன்னேற்றப் பயிற்சியாளராக வர விரும்புபவர்களுக்கு நீங்கள் சொல்லக்கூடிய ஆலோசனை என்ன? அவ்வாறானவர்களுக்கு பயிற்சியளிக்கும் திட்டம் ஏதாவது உங்களிடம் இருக்கின்றதா?

**பதில் -** என்னைப் போன்ற ஒரு ஆலோசகராக, சுயமுன்னேற்றப் பயிற்சியாளராக வர விரும்புவோர்களுக்காக Training of Trainers பயிற்சியை வழங்குகின்றேன்.

ஒரு வாழ்நாள் கற்போனாக (Lifelong Learne)ஆக மிளிர்வதும் update,upgrade & uplift செய்வதும் அவற்றைத் தொடர்வதை அவர்கள் உறுதிப்படுத்தவேண்டும் எனவும் வேண்டுகின்றேன்.

* K.T.Prashanthan - தொடர்புகொள்ள WhatsAppp +94715650258

* YouTube link https://youtube.com/channel/UCqR_OCZTfmupqPzrkh8JuZQ

* Website link - www.ktpconsultancy.com

* Facebook link - https://www.facebook.com/PrashanthanThurairaja/

# தட்டுப்பாடு



## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

மாரிகாலம் வந்தாலே பல பொருட்களுக்கும் பல தொழில்களுக்கம் தட்டுப்பாடு வந்துவிடுகிறது. என்னதான் எடுத்துக் கூறினாலும் எமது மக்கள் எதையும் காதில் வாங்கி மனதில் புதைப்பதில்லை. ஒரு காதில் வாங்கி மறுகாதால் வெளியே விட்டுவிடு கிறார்கள்.

“இரவுக்கு தேவையானவற்றை பகலிலும், மாரியில் தேவையானவற்றை கோடையிலும், வயோதிபத்தில் தேவைப் படுவதை இளமையிலும் மறுமைக்கு தேவையானதை இம்மையிலும் சேகரித்து வைக்க வேண்டும் என்பது உலகின் உயிரிகள் அனைத்துக்கும் பொதுவான விதியாக குறிப்பிட்டுள்ளன நீதி நூல்கள்.

மாலையில் விளக்குகளுக்கு திரிகளை சரிபார்த்து எண்ணெய்விட்டு வைப்பது என்தாயாரின் கடமை அது மட்டுமல்ல, இருளுக்கு முன்னம் தண்ணீர் பாத்திரங்களை நிரப்பிவைப்பார். பழந்துணிகளையும் கிழிந்து போன சாக்குகளையும் சுத்தமாக்கி ஒரு பெட்டியில் சேகரிப்பார். எதற்கம்மா குப்பைகளைத் தா எறிந்து விட்டு வருகிறேன் என்றால் சிரிப்பார். “எடி பிள்ளை அம்மியடியில தள்ளின சூத்தை மிளகும் கறிக்குதவும்” என்பாள். அப்போது அவள் சொன்ன விளக்கங்கள்தான் நான் மேலே கூறியவை.

இந்த பழந்துணிகளும் சாக்குகளும் மாரிகாலத்தில் கால்மிதியாக வாசலில் கிடக்கும் அடுப்பங்கரையில் பிடி துணியாகும். பொருட்களை துடைக்க உதவும். எதுவும் வீணாகாது பழந்துணிகளை கடையில் வாங்க முடியாது. அந்தக் காலத்தில் வீட்டுக்கு வீடு பிரசவித்த குழந்தைகளுக்கு சாணைத் துண்டுகளாக இந்த பழந்துணிகள் விளங்கும். போர்வையாக விரிப்பாக இவை பல அவதாரங்களை எடுக்கும்.

இன்றைய உலகில் சாணைத் துண்டுகளையும் முதலாளிகள் கடையில் விற்பதை காணலாம். அவை பெரிய பெரிய கொம்பனிகளில் தயாரிக்கப்பட்டு அழகாக பொதி செய்யப்பட்டு சந்தைக்கு வருகின்றன. சிறுநீர் கழிக்குமுன்பாகவே குழந்தை அதை கவட்டுக்குள் சுமக்கிறது. சீறுநீர் கழித்தபின்னும் கருணைகூர்ந்து தாயார் அதை அகற்றும் வரை சகித்துக் கொண்டு வாழ பழகியிருக்கிறது. பெருந்தொகைப் பணமும் இதற்காக செலவிடப்படுகிறது.

துண்டுகளை சேர்த்து வைத்து தண்ணீரில் கழுவி காயவைத்து சாம்பிராணிப் புகை பிடித்து மீண்டும் மீண்டும் அவற்றை கிழியும் வரை பாவித்தவர்கள் நாம். பணமும் பழைய துணிகளும் எமக்கு ஒன்றுதான். எல்லாமே சேகரிப்புத்தான். சின்ன எறும்புகளைப் பார் அவை மாரிகாலத்தில் உணவை தேடி எடுத்துச் செல்ல முடியாது. எனவே கோடையில் அவற்றை சேகரித்து பாதுகாப்பான இடங்களில் சேகரிக்கின்றன. மழை வரக்கூடிய அறிகுறிகள் தென்பட்டதும் அவற்றை மேடான இடங்களுக்கு கொண்டு செல்கின்றன. தேனீக்கள் நிலாக் காலம் முழுதும் சேகரிக்கும் தேனை இராக்காலங்களில் குடித்து மயங்கிக் கிடக்கின்றன. அவை யாரிடமும் வட்டிக்கு

கடன் வாங்குவதில்லை. மாரிகாலத்தில் அன்றாடக் கூலிகளுக்கு வேலை கிடைப்பதில்லை. அவர்கள் சேமித்தும் வைப்பதில்லை. இன்றைய விலைவாசியில் அவர்களால் சேமிக்கவும் முடியாது. எனவே மழைக்காலத்தில் பட்டினி தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

இப்போதெல்லாம் புலம்பெயர் நாடுகளில் வாழ்வோர் தமது தாய்நாட்டில் வாழும் சக மனிதருக்கு உதவி செய்கிறார்கள். இந்த உதவிகள் அனைத்தும் அவர்களுக்கு நிரந்தரமானவையாக இருப்பதில்லை. ஏதோ ஒரு சில நாட்களுக்கு அவர்களின் பசியைப் போக்குவதாக அமைகின்றன. மகிழ்ச்சிதான். ஆனால் இந்த உதவிகளை நிரந்தரமாக்கிவிட்டால்தான் அந்தக் குடும்பங்கள் சிறப்பான எதிர்காலத்தை கொண்டிருக்க முடியும். உதாரணமாக ஒரு குடும்பத்திக்கு கோழி வளர்ப்பதற்கான உதவியை செய்ய விரும்புவோர் வழங்கும் பணம் அதற்கான கூடு கட்டுவதற்கும் போதாது. நிறுவனங்கள் செய்யும் உதவிகளும் அவ்வாறே. கூட்டைக்கட்டி குஞ்சுகளையும் வாங்கி விட்டதும் உதவி வழங்குநர் தமது கடமையை முடித்துக் கொள்கிறார். அந்தக் குஞ்சுகள் பயன் தருவதற்கு சுமார் ஆறு ஏழு மாதங்களாகலாம். அதுவரை அதற்கான தீன் செலவு மாதாமாதம் அதிகரித்துச் செல்லும்.

ஆரம்பத்தில் பத்தாயிரமாக இருப்பது நான்கு மாதமாகிவிட்டால் முப்பதாயிரம் வரை தேவைப்படும். இந்த கணக்கு நூறு குஞ்சுகளுக்குத்தான். இப்போது தமது வயிற்றுப்பாட்டிற்கே தள்ளாடும் குடும்பம் அந்தக்கோழிக் குஞ்சுகளை வளர்க்க முடியாது. முடியவே முடியாது. எனவே குஞ்சுகள் சந்தைக்கு வரும். சந்தையைப்பற்றித்தான் எல்லோருக்கும் தெரியுமே உற்பத்தி செய்பவனுக்கு ஐம்பது ரூபா. அதை இருந்த இடத்தில் வாங்கி விற்பவனுக்கும் அதே ஐம்பது ரூபா. தட்டுப்பாடு வந்த பிறகு விலையை எல்லாம் பார்க்க முடியாது அவன் விற்றுத்தான் ஆகவேண்டும். முடிவில் திட்டம் பிழையாப் போச்சு எனறு கதையை முடிப்பார்கள். சனம் அக்கறையில்லை என்பார்கள்.

அண்மையில் என் நண்பர் ஒருவர் என்னிடம் இப்படி கோழிகளை வளர்க்கும் ஆலோசனையை சொன்னார். நான் சொன்னேன் நீங்கள் நூறு குஞ்சுகளை கொடுத்து வளர்க்க சொல்வதை விட ஐந்து கோழிகளைக் கொடுங்கள். அவை முட்டையிடும் பருவமாக இருந்தால் அவற்றை விற்க மனம் வராது அதிலிருந்து மேலும் குஞ்சுகளைப் பெருக்கலாம். அத்துடன் தீன் பிரச்சினை இல்லாமல் வீட்டில் சிந்திசிதறும் தானியங்கள் தேங்காய்ப்பூ. செடிகள் என தானாகவே மேய்ந்து தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும். வீட்டிற்கும் வருமானம் வந்து கொண்டிருக்கும் என்றேன்.



அதை பரீட்சார்த்தமாக செய்து பார்க்கலாமா என்றார். பரீட்சார்த்தம் தேவையே இல்லை நான் அப்படி ஆரம்பித்த கோழி வளர்ப்புத்தான் இன்று என்னிடம் நூறு கோழிகள் இருக்கின்றன என்றேன். என்ன ஒரு குறை - சேவல்களை விற்றுவிட முடிவதில்லை. சந்தைக் குறுக்கீடில்லாமல் விற்க முயல்கிறேன் அவ்வளவுதான்.

மக்கள் எந்த தரத்தில் இருந்தாலும் அவர்களுக்கு கடன் வாங்காமல் வாழத் தெரியவில்லை. ஒவ்வொரு அரச உத்தியோகத்களுக்கும் அவரவர் ஊதியத்துக் கேற்ப கடன் இருக்கிறது. சம்பளத்தில் கடனுக்காக வெட்டப்படாமல் முழுச்சம்பளம் வாங்குவோர் யாராவது இருந்தால் அது பெருமையாக பேசப்பட வேண்டிய விடயம்.

வயல் விதைப்பதற்காக வட்டிக்கு பணந் தேடி அலையும் ஒருவர் கடந்த வருடங்களிலும் இதேபோல கடன் வாங்கியே வயலை விதைத்தார். வயல் தன்னால் இயன்ற விளைவைத்தான் கொடுக்கும். அது தன் எஜமான் பட்ட கடன் எல்லாவற்றையுமா கட்டும். முடிவில் இவன் கடனை கட்டுவதேயில்லை. ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாக கடன் வழங்குவோரை நாடினான். சூதாடியைப்போல வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் ஒவ்வொரு போகத்திலும் அழித்தான்.

இன்று தான் குடியிருக்கும் வீட்டை ஈடு வைக்கும் நிலைக்கு வந்துள்ளான். கண்டிப்பாக இந்த வயல் விதைக்கத்தான் வேண்டுமா? இப்படிப்பட்வனிடம் நான் சேமிப்பைப் பற்றி கூற முடியுமா?. இவைபற்றி யாராவது சொல்லித்தந்திருக்கிறார்களா? ஈ எறும்பு பல்லி சிலந்தி போன்ற சிறு பிராணிகளுக்கு இதையெல்லாம் யார் சொல்லித் தந்தார்கள். இயற்கையோடிணைந்த வாழ்க்கையை அவை வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

வீட்டில் எப்போதுமேதட்டுப்பாடு நிலவுகின்றமை சகஜமான ஒன்றுதான். வருடந்தோறும் எந்த தட்டுப்பாட்டையும் சமாளித்து வாழ மனிதன் தயாராக இருக்க வேண்டும். பொதுவாகவே நாம் பெரும் வர்த்தக் நிறுவனங்களை கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு முக்கியமான பொருட்களின் விலையேற்றத்துக்கு முன்னும் ஒரு தட்டுப்பாடு வலிந்து உருவாக்கப்படும். அந்த தட்டுப்பாட்டை அடுத்து பொருள் விலையேற்றம் நடக்கும் போது ஸ்ரீமான் பொதுஜனத்துக்கு விலையேற்றம் பெரிசாகத் தெரியாது. குறித்த பொருள் தனக்கு கிடைத்ததையே அவர் பெருமையாக யோசிப்பார்

வீட்டில் எப்பவுமே தட்டுப்பாடு நிலவுகின்றமை சகசமான ஒன்றுதான். வருடந்தோறும் எந்த தட்டுப்பாட்டையும் சமாளித்து வாழ மனிதன் தயாராக இருக்க வேண்டும். பொதுவாகவே நாம் பெரும் வர்த்தக் நிறுவனங்களை கவனித்துப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு முக்கியமான பொருட்களின் விலையேற்றத்துக்கு முன்னும் ஒரு தட்டுப்பாடு வலிந்து உருவாக்கப்படும். அந்த தட்டுப்பாட்டை அடுத்து பொருள் விலையேற்றம் நடக்கும் போது சிறீமான் பொதுஜனத்துக்கு விலையேற்றம் பெரிசாகத் தெரியாது. குறித்த பொருள் தனக்கு கிடைத்ததையே அவர் பெருமையாக யோசிப்பார்.

குறிப்பாக பெரிய முதலாளிகளின் சேமிப்பு வலுவாக்கம் பெறும் நிலையில் இருந்த பொருட்கள் எப்படியோ மாயமாகும் விலை குறித்த விபரம் வந்த மறுகணமே. “சூ மந்திரக்காளி” எனறு ஊதிவிட்டு பொருட்கள் பட்டறையில் வீற்றிருக்கும். இதுவும் ஒரு சேமிப்புத்தான் இதை ஏன் பிழையாகப் பார்க்க வேண்டும். இப்போது சீனி காணாமல்போயிருக்கிறது இன்னுமின்னும் எத்தனையோ. நாங்கள் பனங்கட்டியை பழையபடி தேடலாமா.



# குடைமிளகாய் பயிர்செய்கையில் அதிகளவு வருமானத்தைப் பெற..

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



எமது உணவில் அவசிய தேவை தக்காளி, வெங்காயம் என்று கூறுவார்கள்.

அதேபோல் மிளகாய் வத்தல், குடை மிளகாய் போன்றவையும் அதிகம் பயன் படுகின்றன. குடைமிளகையானது கறி மிளகாயை விட உறைப்பு குறைவாகவே இருக்கின்ற காரணத்தினால் சிறியவர்கள் வரை விரும்பி உண்ணுகின்றார்கள்.

அதிலும் வெளிநாடுகளில் பல வண் ணங்களில் உற்பத்தி செய்து உணவுக்காக பயன்படுத்துகின்றார்கள். இது பல நிறங்க ளில் காணப்படுகிறது. குறிப்பாக சிவப்பு, மஞ்சள், பச்சை, ஆரஞ்சு நிறங்களில் காணப்படுகிறது. நிறங்களில் மாறுபாடு இருந்தாலும் விளைச்சலிலும் அதன் பருமனிலும் மாறுபாடு இருக்காது.

### செய்கைக்கு ஏற்ற இரகங்கள்

கே டீ பி எல் - 19, பயிடாகி கட்டி ஆகிய இரகங்கள் குடைமிளகாய் பயிர்செய்கைக்கு ஏற்றவை. பொதுவாக ஜீன் - ஜீலை மாதங்களில் குடைமிளகாய் நடுகை செய் யப்படுகின்றது. பச்சை வீடுகள் அமைத்து உற்பத்தி செய்வதாக இருந்தால் அனைத்து காலங்களிலும் நடுகை செய்யலாம். குடை மிளகாயை பொறுத்தவரை வெப்ப வல யங்களில் இதன் வளர்ச்சி வீதம் குறைவாக இருக்கும். அதோடு காய்க்கும் திறனும் குறைவாக இருக்கும். இதனால் தான் அதிகமான விவசாயிகள். Greenhouse அமைத்து சூழலை குளிர்ச்சியாக்கி பயிரி டுவதன் மூலம் வெப்ப வலயத்திலும் இதனை சாத்தியப்படுத்த முடியும் என் கின்றார்கள்.

அனுபவம் வாய்ந்த விவசாயிகள். குடைமிளகாயைப் பொறுத்தவரை 24° Celsius க்கு உட்பட்ட கால நிலையிலே வளரக் கூடியதாக இருக்கும். இருப்பினும் தற்பொழுது அதிகமான விவசாயிகள் 30 பாகை செல்சியஸ் வெப்பநிலை உள்ள இடங்களிலும் பயிரிட்டு சாத்தியப்படுத்து கின்றார்கள்.

### மண்

நல்ல வடிகால் வசதியுடைய, உவர்ப்புத் தன்மை இல்லாத களிமண், செம்மண் போன்ற நிலங்களில் குடைமிளகாய் பயிர் செய்வதற்கு ஏற்றது. அதாவது 6.5 - 7.0 வரை கார அமிலத் தன்மை கொண்ட மண்ணில் நன்கு வளரும். குறிப்பாக உவர்மண், மணல் மண், கற்கள் நிறைந்த மண் போன்றவற்றில் பயிரிட முடியாது.

விதையளவு ஓர் ஏக்கருக்கு 500 கிராம் விதைகள் வீதம் தேவைப்படும். குடைமிளகாய் விதைக்க முன். 500 கிராம் விதைக்கு. 50 கிராம் வேப்பம் விதையினை பொடியாக்கி இதனோடு 50 கிராம் அடுப்பு சாம்பலும் கலந்து விதைக்க வும்.

### நாற்றுமேடை தயாரித்தல்

நாற்றுமேடை அமைக்க 1 மீ (3 அடி) அகலம் மற்றும் நீளம் தேவைக்கு ஏற்றால் போல் அமைத்துக் கொள்ளலாம். உயரம் 15 செ.மீ கொண்ட படுக்கைகளை அமைக்க வேண்டும். விதைகளை 10 செ.மீ வரிசை இடைவெளியில் 0.5 செ.மீ ஆழத்தில் விதைக்க வேண்டும். இதில் மாற்றம் செய் யக்கூடாது கட்டாயம் மேற்குறிப்பிட்ட இடை வெளிகள் இருந்தாக வேண்டும்.

அப்போதுதான் வீரியமான, ஆரோக் கியமான கன்றுகளை எம்மால் பெற முடியும். விதைகளை ஊன்றியபின்பு 15 -20 கிலோ நன்கு மக்கிய உரத்தினை விதைத்த, 16 நாளில் ஒவ்வொரு பாத்தி படுக்கைக்கு மேல் தூவி விட்டு நீர் பாய்ச்ச வேண்டும். பாய்ச்சப்படும் நீரானது ஒரு வாரத்திற்கு நனையும் அளவிற்கு இருந் தால் போதும். மாறாக ஊற்றும் நீரானது



**பெரிய அளவில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கம் இருக்கும் விவசாயிகள் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும் அதாவது உங்களால் உற்பத்தி உற்பத்தி செய்யப்படும் குடைமிளகாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். குடைமிளகாயின் தோற்றம் மாறுபடாமல் நேர்த்தியாக இருந்தால் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும்**

பாத்தியினை விட்டு வெளியேறும் அளவிற்கு இருக்க.கூடாது.

### நடுகைக்கு நிலம் தயாரித்தல்

நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறைகள் நன்கு உழவு செய்ய வேண்டும். கற்கள் நிறைந்த நிலத்தினை முற்றாக தவிர்த்து விட வேண்டும். ஓரிரு கற்கள் இருந்தால் அவற்றை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட வேண்டும். கடைசி உழவுக்கு முன் ஒரு ஏக்கருக்கு 15 டன் தொழுவுரம் அல்லது மக்கிய உரத்தினை அடி உரமாக இட்டு நன்கு உழவேண்டும். நடவு செய்வதற்குரிய நிலத்தில் 4 அடி அகலம் உடைய மேட்டுப் பாத்திகளை 1 அடி இடைவெளியில் அமைக்க வேண்டும்.

சொட்டு நீர் பாசனமாக இருந்தால் பக்கவாட்டுக் குழாய்கள் மேட்டுப்பாத்தியின் மத்தியில் இணையாகச் செல்லுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். நடுவதற்கு முன் நடவு நிலத்தில் சிறிய அளவில் நீர் பாய்ச்ச வேண்டும்.

35 நாட்கள் வயதான செடிகளை 0.5 சதவீத சூடோமோனாஸ் புளோரசன்ஸ் கரைசலில் 15 நிமிடங்கள் நனைத்த பிறகு இரு வரிசை நடவு செய்ய வேண்டும். அமைக்கப்பட்ட பாத்தியில் 90 X 60 செ.மீ என்ற இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இந்த இடைவெளியினை கவனத்தில் கொண்டு தான் நான்கு அடி அகலத்தில் பாத்தி அமைத்துள்ளோம்.

### நீர் நிர்வாகம்

இதற்குரிய நீர் கட்டமைப்பாக சொட்டுநீர் பாசனம் அல்லது தூவல் நீர்ப்பாசனத்தினை பயன்படுத்தலாம். நடும் பொழுது கட்டாயம் சிறிய அளவில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதன்பின் மூன்றாம் நாள் உயிர்தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் மண்ணின் தன்மைக்கேற்ப பாசனம் செய்ய வேண்டும்.

அதிக அளவில் நீர் தேங்கி நிற்கும் அளவுக்கு நீர் பாய்ச்சக் கூடாது.

நிலத்தில் ஈரத்தன்மை அதிகமாக இருக்குமாக இருந்தால் வேர் அழுகல் போன்ற நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. சூவளர்ச்சி ஊக்கிகளுக்கு இயற்கையாக உருவாக்கப்பட்ட பஞ்சகாவியா அல்லது ஜீவாமிர்தத்தைப் பயன்படுத்தலாம். பீடை நாசினிகலுக்கு இயற்கை கிருமி நாசினிகளான கற்பூர கரைசல், பஞ்சகாவியா, புகையிலை கரைசல், மூலிகை கரைசல் போன்ற இயற்கை கிருமி நாசினிகளை பயன்படுத்தலாம். பூச்சிகளின் தாக்கம் அதிகமாக இருந்தால் வீரியம் கூடிய அக்கினி அஸ்திரா போன்ற இயற்கை கிருமி நாசினியை பயன்படுத்தலாம்.

திறனை அதிகரிக்க தேமோர்கரைசல் என்று சொல்லப்படும் தயிர் கரைசல், அல்லது பெருங்காய கரைசலை பயன்படுத்தலாம். இவற்றை பயிர் பூக்கும் சந்தர்ப்பத்திலே பயன்படுத்த வேண்டும். குறிப்பாக மாலை வேளையில் பயன்படுத்த வேண்டும் இவற்றை பயன்படுத்துவதனால் பூக்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிக அளவில் காய்க்க ஆரம்பிக்கும் சூகளை நிர்வாகம்: நடவு செய்த 30 மற்றும் 60 நாட்களில் கட்டாயம் களையெடுத்து



பராமரிக்க வேண்டும்.

சொட்டுநீர் பாசன முறையினை பயன்படுத்தி இருந்தால் களைகள் குறைவாக இருக்கும். தோல் நீர் பாசனமாக இருந்தால் அதிக அளவில் களைகள் முளைக்கும் நன்கு வளர்ச்சி அடைந்த ஆரோக்கியமான செடிகள் நடவு செய்யப்பட்டது. நன்றாக பராமரிக்கப்பட்டால் சரியாக இரண்டரை மாதத்தில் அதாவது 75ம் நாள் முதல் அறுவடை செய்யலாம்.

காய்களின் அளவைப் பொறுத்து தரம் பிரித்து விற்பனைக்கு அனுப்ப வேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கம் இருந்தால். சிறிய வளைந்த மற்றும் உருமாற்றமுள்ள காய்களைத் தனியாக பிரித்தெடுத்து ஆரோக்கியமான காய்களை மட்டும் தெரிவு செய்து அனுப்ப வேண்டும். சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டால் குடை மிளகாயின் விளைச்சல் சாதாரணமாக 25 – 30 டன் காய்கள் வரை எமக்கு கிடைக்கும். குறிப்பு குடமிளகாயை பொருத்தவரை இதமான வெப்ப நிலை உள்ள பிரதேசங்களில் அதிக விளைச்சலை கொடுக்கும். அதோடு சந்தை வாய்ப்பினை பல தரப்பிலும் உறுதி செய்து விட்டு நடவு செய்ய வேண்டும்.

எமது நாட்டினை பொறுத்தவரை ஓரிரு விவசாயிகள் மட்டுமே தற்பொழுது வரை குடைமிளகாய் உற்பத்தி செய்கின்றார்கள். ஆகையால் விவசாயிகள். ஓரிரு கொள்வனவாளர்களை மட்டும் நம்பாமல் ஐந்து அல்லது ஆறு கொள்வனவாளர்களிடம் பேசி உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும்.

பெரிய அளவில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கம் இருக்கும் விவசாயிகள் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும் அதாவது உங்களால் உற்பத்தி உற்பத்தி செய்யப்படும் குடைமிளகாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். குடைமிளகாயின் தோற்றம் மாறுபடாமல் நேர்த்தியாக இருந்தால் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். வண்ணங்களில் மாறுபாடு இருப்பதினால் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

# சிறப்பாக முடிவெடுப்பதற்கு உங்களுக்கு என்ன தேவை?



பெரும்பாலான விஷயங்களில் நாம் முடிவெடுக்கத் தடுமாறுகிறோம். ஏன் தெரியுமா? நாம் தோல்வி அடைந்துவிடுவோம் என்கிற பயம்தான் காரணம். இதைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்? ஈடுபடும் காரியத்தில் தோல்வி மற்றும் வருத்தம் என்கிற இரண்டையும் வரையறுக்க வேண்டும். அப்படி வரையறுத்த பின், எக்காரணம் கொண்டும் அந்த இரண்டும் நடந்து விடாதபடி நாம் நம் நடவடிக்கைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கேற்ப நம் முடிவுகள் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட வகையில் சிறப்பான முடிவை எடுக்க என்ன மாதிரியான விஷயங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பது குறித்து விளக்கமாக எடுத்துச் சொல்கிறது 'மென்டல் மொடல்ஸ்' (Mental Models) என்ற புத்தகம். வாஷிங்டனைச் சேர்ந்த பீட்டர் ஹாலின்ஸ் எழுதிய புத்தகம் இது.

### சிறப்பான முடிவெடுக்க உதவுவது எது?

"எது, சிலரைத் தொடர்ந்து சிறப்பான முடிவுகளை எடுக்க வைத்து வெற்றியைக் கொண்டுவந்து கொட்டுகிறது..? அவரிடம் எதிர்காலத்தைத் துல்லியமாகப் பார்க்கக் கூடிய அளவிலான சிறப்புப் பண்புகள் கொண்ட தொலைநோக்கிக் கருவி (Binoculars) இருக்கிறதா? என்றெல்லாம் நமக்குத் தோன்றும்.

இதில் வேடிக்கை என்னவென்றால், பைனாகுலர் கொண்டு நாம் பார்க்கும் போது நாம் அருகே இருக்கும் விஷயங்களை ஒட்டுமொத்தமாக மறந்து விடுவோம். நம் மூளையானது பைனாகுலரில் இருக்கும் தோற்றத்தை உணருமே தவிர, நாம் இப்போது இருக்கும் சூழலை உடனடியாக மறந்து விடும். இதுதான் மிகப்பெரிய நகைமுரணான விஷயம்.

இது தவிர, நாம் அனைவருமே எல்லா விஷயங்களிலும் நாம் ஒரு நிபுணர் என்கிற மனநிலைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ வந்துவிடுகிறோம். இதனால் நாம் செய்யும் ஒவ்வொரு காரியம் குறித்தும் ஒரு நிபுணரைப் போலவே நாம் சிந்திக்க ஆரம்பிக்கிறோம். இதுவே ஒரு தவறான விஷயம். நன்கு அறிந்த ஒரு விஷயத்திலுமே ஒரு பழகுநர் போன்ற மனப்பான்மையுடன் செயல்படும்போது பெரிய தவறுகளை நாம் செய்யமாட்டோம்.

வெளி உலகம் குறித்து ஒருவர் கொண்டிருக்கும் பார்வைதான் (மென்டல் மாடல்) சிறப்பான முடிவுகளையோ, சுமாரான முடிவுகளையோ எடுக்க வைக்கிறது'' என்று சொல்லும் ஆசிரியர், "சாதாரண சராசரி மனிதர்களுக்கும் வெற்றியாளர்களுக்கும் இடையே முடிவெடுப்பதில் இருக்கும் வித்தியாசம் குறித்து விளக்குகிறார். சிறப்பான முடிவுகளை எடுக்கத் தேவைப்படும் சரியான சிந்தனையைச் செய்ய உதவும் 30 உபாயங்கள் குறித்தும் உதாரணங்களுடன் சொல்கிறார் ஆசிரியர்.

நாம் அனைவருமே எல்லா விஷயங்களிலும் நாம் ஒரு நிபுணர் என்கிற மனநிலைக்குத் தெரிந்தோ, தெரியாமலோ வந்துவிடுகிறோம். இதனால் நாம் செய்யும் ஒவ்வொரு காரியம் குறித்தும் ஒரு நிபுணரைப் போலவே நாம் சிந்திக்க ஆரம்பிக்கிறோம். இதுவே ஒரு தவறான விஷயம்

"1994ஆம் ஆண்டில் சார்லி முங்கர் (வாரென் பஃபெட்டின் பார்ட்னர்) ஒரு பல்கலைக்கழகப் பட்டம் வழங்கும் விழாவில் 'உலகம் குறித்த அடிப்படையான ஞானம் எப்படி முதலீட்டிலும் தொழிலிலும் உதவுகிறது' என்ற தலைப்பில் 'மென்டல் மாடல்' குறித்துப் பேசினார். அவர் அறிமுகப்படுத்திப் பேசிய இந்தச் சொற்றொடர் இன்றைக்கு உலகம் முழுவதும் அனைவரும் ஆர்வமுடன் தெரிந்து கொள்ளவும் விவாதிக்கவும் செய்யும் விஷயமாக உருவெடுத்துவிட்டது.

### எது உலகம் குறித்த அடிப்படை ஞானம்?

உலக விஷயங்களைத் தனித்தனியாக நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறோம் என வைத்துக்கொள்வோம். என்னவாகும்? தனித்தனி தரவுகளாக நம்முடைய மூளையில் அது இருக்கும். அவை ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு இதனால் இது நடக்கிறது இதன் விளைவாக இது நடக்க வாய்ப்புள்ளது என்று முடிச்சுப் போட்டுப் பார்க்கும் திறமை நமக்கு வேண்டும். இதிலேயே பெரிய முரண்பாடு இருக்கிறது. எந்த ஒரு விஷயத்திலும் இது நடந்தால், அதன் காரணமாக இது நடக்கிறதா அல்லது இதுவும் இதுவும் ஒரே நேரத்தில் நடக்கிறதா என்பதைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. இப்படி முடிச்சுப் போட்டுப் பார்த்தால் மட்டுமே நம்மால் அந்தத் தரவுகளை உபயோகித்து பலனடைய முடியும். இதற்கு நம் மூளையில் 'மென்டல் மாடல்கள்' வேண்டும்.

உங்களுடன் பள்ளி, கல்லூரியில் படித்த சிலர் புத்தகத்தைக் கரைத்துக் குடித்து, கேட்கப்படும் கேள்விக்கு அதில் உள்ளதை அப்படியே அச்சு அசலாகப் பதில் சொல்லும்/எழுதும் திறன் கொண்டவர்களாக இருந்திருப் பார்கள். படிப்பைத் தவிர, அவர்கள் மற்ற விஷயங்களில் பெரிய அளவில் வெற்றி பெற முடியாமல் தவிப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். படிப்பிலும் வெறுமனே கற்றதைத் திருப்பி ஒப்பிக்கும் விதமான தேர்வுகளிலேயே சிறந்த மதிப்பெண்ணை அவர்கள் எடுத்திருப்பார்கள். மூளையை உபயோகித்து சிந்தித்து ஒன்றை ஒன்று இணைத்து புதியதாக, சொந்தமாக எழுத வேண்டிய ரீதியிலான கேள்விகள் கேட்கப்படும் தேர்வுகளில் அவர்கள் பெரிதாக சோபித்திருக்க மாட்டார்கள். இதற்குதான் நம்முடைய மூளையில் இந்தத் தகவல்களை ஒன்றுக்கொன்று இணைத்து உபயோகிக்கத் தேவையான வலைப் பின்னல்கள் தேவை. இதையே 'மென்டல் மாடல்' என்கிறோம். இதற்கு பல்வேறு வகை மாடல்கள் நம்முடைய மூளையில் இருக்க வேண்டும்.

தலைசிறந்த கவிஞர்கள் பலரும் உலகத்தைக் கையாளுவதில் தடுமாறுவதும் இதனால்தான். அவர்கள் மூளையில் இருக்கும் 'மென்டல் மாடல்'கள் கவிதை வடிக்க மிகவும் உகந்ததாக இருக்கும். ஆனால், உலகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது. இதே போல தான் பல துறைகளிலும் இருக்கும். பொருளாதார நிபுணர் அவருடைய துறைக்கு மிகவும் உதவும் மாடலை மூளையில் கொண்டிருப்பார். அதை வைத்துக்கொண்டு வேறு உலக விஷயங்களைக் கையாள முயலும்போது அவரால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாமல் போகும். ஆனால், 80 அல்லது 90 மாடல்களைக் கொண்டு உலகத்தில் இருக்கும் 90% விஷயங்களில் மிகச் சிறப்பாகச் செயல்பட முடியும்" என்று சொல்லும் ஆசிரியர், 'மென்டல் மாடல்' பற்றியும் விவரிக்கிறார்.



"நீங்கள் எதிர்கொள்ளும் எந்த ஒரு விஷயத்திலும் எது மிகவும் முக்கியமானது (சூழல், பின்னணி மற்றும் திசை போன்ற ரீதியில்) என்பதைக் கண்டுபிடிக்க உதவும் மூளையில் உள்ள தகவல் தரவுப் பின்னல்களையே 'மென்டல் மொடல்' என்கிறோம். நீங்கள் எதிர்கொள்ளும் விஷயம் உங்களுக்குப் பரிச்சயமே இல்லாத ஒன்றாக இருந்தாலுமே அதிலுள்ள முக்கியமான விஷயங்களை சுலபமாகக் கண்டறியக் கூடிய திறனை இந்த 'மென்டல் மொமாடல்'கள் கட்டமைத்துத் தருகின்றன. தற்போதிருக்கும் சூழ்நிலையை முழுமையாகப் புரிந்துகொள்ளவும் எதிர் காலத்தில் எந்த மாதிரியான சூழ்நிலைகள் உருவாகும் என்பதை உருவகப்படுத்திப் பார்க்கவும் இந்த 'மென்டல் மாடல்'கள் உதவுகின்றன" என்கிறார் ஆசிரியர்.

சூழலைப் புரிந்துகொண்டு வேகமாக முடிவெடுக்க உதவும் 'மென்டல் மாடல்'கள், எதிர்கொள்ளும் விஷயங்களைத் தெளிவாகப் பார்ப்பதற்கு உதவும் 'மென்டல் மொடல்'கள், சிக்கல்களைத் தீர்க்க கண்ணைத் திறந்துவிடும் அளவுக்கான விஷயங்களைச் சொல்லும் மாடல்கள், தவிர்க்க வேண்டிய நேரத்தில் தவறான 'மென்டல் மொடல்'களைத் தவிர்ப் பதற்கு உதவும் மாடல்கள், உலகின் மிகப் பழைமையான விதிகளைக் கொண்டு செயல்படும் மொடல்கள் என்ற தலைப்புகளில் ஐந்து அத்தியாங்களாகப் பிரித்து எழுதப் பட்டிருக்கும் இந்தப் புத்தகத்தில் ஒவ்வோர் அத்தியாயத்திலும் வெவ்வேறு ஆறு மென்டல் மாடல்கள் குறித்து விளக்கமாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.

எந்த ஒரு விஷயத்திலும் முக்கியமானவற்றை கருத்தில்கொண்டு அவசரம் என்பதை ஒதுக்கி வைப்பதன் அவசியம் குறித்து சொல்லும் ஆசிரியர், "அவசரம் என்கிற பீதியை ஏற்படுத்தி முக்கியமான விஷயங்களை நம் கண்ணில் இருந்து மறைக்க இந்த உலகம் பிரம்மப் பிரயத்தனம் செய்துகொண்டே இருக்கும். முக்கியமானவை எல்லாமே அவசரமானவை என்பது போன்ற தோற்றத்தை அது நமக்கு அளிக்க முயலும். இதனாலேயே நாம் நம்முடைய நேரத்தில் பெரும்பான்மையானதை முக்கியமான வேலைகளைச் செய்வதில் செலவிடாமல் அவசர வேலைகளைச் செய்வதிலேயே செலவிடுகிறோம்.

முக்கியமான காரியங்கள் நம்முடைய குறுகிய கால மற்றும் நீண்டகால இலக்குகளை அடைய நிச்சயமாக உதவியாக இருப்பவையாக இருக்கும். அவசரமாகச் செய்ய வேண்டிய காரியங்கள் பெரும்பாலும் அடுத்தவர்களிடம் இருந்தே நம்மை நோக்கி வருவதாக இருக்கும். அவர் கேட்கிறாரே, இவர் சொல்கிறாரே என்று நினைத்து நாம் இந்தக் காரியங்களை செய்வோம். அவசரம் என்பது நம்மை செய்ய வைக்கும். முக்கியம் என்பது கிடப்பில் போடப் படும். பின் அதற்குண்டான விலையை நாம் கொடுக்கவே செய்வோம். முக்கியமான ஒரு விஷயத்தில் நிறைய குழப்பங்கள் இருப்பதால், நேரம் ஒதுக்கி சிந்தித்து செயல்பட வேண்டியிருக்கும். கால அவகாசம் அதற்கு இருக்கும்.

(22ஆம் பக்கம் பார்க்க)




# வர்கீஸ் குரியனும் இலங்கை பால் உற்பத்தி நிலவரமும்...


Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்த வெண்மைப் புரட்சியின் தந்தை வர்க்கீஸ் குரியனை அழைத்திருந்தார். இலங்கையினை கள ஆய்வு செய்தபோது நியூசிலாந்து நாட்டின் fontera நிறுவனத்தின் செல்வாக்கை அவரால் உணர முடிந்தது. பலம் மிக்க மலையகத் தமிழ் அரசியல்வாதி உட்பட இலங்கையின் பல அரசியல் பிரமுகர்கள் அந்தந்த பல்தேசிய நிறுவனங்களின் முகவர்களாகவே செயற்படுவதைக் காணுற்றார். யாராலும் அவர்களை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. இதன் பாரதூரத்தை தனது ”எனக்கும் ஒரு கனவு” எனும் சுயசரிதையில் இப்படிக் குறிப்பிட்டிருப்பார்.


அது தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலம். இலங்கை சென்ற குரியனுக்கு ஆயுதப் படையின் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இது குரியனுக்கு பிடிக்கவில்லை. அசௌகரியமாக உணர்ந்தார். அதிபர் சந்திரிக்காவிடம் ”நான் தமிழில் பேசக் கூடியவன் என்றபடியால் விடுதலைப் புலிகள் என்னை எதுவும் செய்யமாட்டார்கள். தயவுசெய்து இந்த பாதுகாப்பை எடுங்கள்” என்றிருக்கிறார்.

அதற்கு அதிபர் சந்திரிக்கா ”இது விடுதலைப் புலிகளிடம் இருந்து உங்களைப் பாதுகாக்க அல்ல. பால் பல் தேசிய நிறுவனங்களின் கூலிப் படைகளில் இருந்து உங்களை காக்க. சிறு தொகை பணத்துக்கு உங்களைக் கொன்று விடக் கூடும். அவர்களுக்கு இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு காண்பது விருப்பமில்லை” என்றாராம்.

இது தவிர இந்தியாவிலிருந்த நியூசிலாந்தின் பல் தேசிய பால் நிறுவன பிரதிநி கூட இலங்கையின் பால் உற்பத்தி தன்னிறைவு காண்பதை விரும்பாமல் வர்கீஸ் குரியனுடன் தர்க்கித்திருக்கிறார். இலங்கை பால்ச் சந்தை மிகச் சிறியது. அதைக் கூடக் கைவிடும் நிலையில் பால் வழங்கும் பல் தேசிய நிறுவனங்கள் இருந்திருக்கவில்லை என்பதை இது காட்டுகிறது.

இலங்கையில் இன்று வரைக்கும் பாலில் தன்னிறைவு காண முடியவில்லை. 40-50% உள்ளூர் உற்பத்தி. ஏனையவை இறக்குமதி. இது ஒரு மிகப் பெரிய சதி வலை போன்றது. இலகுவில் மாற்ற முடியாது. இது இப்படியிருக்க இலங்கை பாலில் தன்னிறைவு காண கறவை மாடுகளை நியூசிலாந்தில் இருந்து இறக்கியதுதான் முரண் நகைச்சுவை. ஆயிரக் கணக்கில் இறக்குமதியாகிய மாடுகள் கடைசியில் செத்து மடிந்ததுதான் மிச்சம். அதை இறக்கிய அரசியல்வாதிகள் கோடிக் கணக்கில் உழைத்துக் கொண்டார்கள் என்பது வேறு கதை.





இத்தகைய மண் வள மேலாண்மை நடைமுறைகளில் உரங்களின் பயன்பாடு, கரிம உள்ளீடுகள், பருப்பு வகைகளுடன் பயிர் சுழற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட கிருமிகளின் பயன்பாடு ஆகியவை அடங்கும், இந்த நடைமுறைகளை உள்ளூர் நிலைமைகளுக்கு எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றிய அறிவு.

### பாகிஸ்தானும் குரியனும்

எண்பதுகளில் வர்கீஸ் குரியனை அழைத்து பாகிஸ்தான் அரசு அந்த நாட்டு பாலுற்பத்தி துறையை மேம்படுத்த ஆலோசனை கேட்டிருந்தது. உலகில் கணிசமானளவு பாலுற்பத்தியை செய்யவல்ல நாடான பாகிஸ்தான் கூட தன்னிறைவு காணாத நிலையே இருந்தது. அன்றைய திகதியில் வெளிநாட்டிலிருந்து கணிசமான பால் மாவை பாக்கிஸ்தான் இறக்குமதி செய்திருந்தது. எனினும் இறக்குமதி தீர்வை மிகக் குறைவாகவே அறவிட்டிருந்தது. இதன் காரணமாக உள்ளூர் பால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். வெளிநாட்டு நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இதனை தவிர்க்கும் படி குரியன் பாக்கிஸ்தான் அரசுக்கு கூறினார். தீர்வையை அதிகரிக்கும்படி பரிந்துரைத்தார். ஊழலும் அரசியல் துஷ்பிரயோகமும் கொடிகட்டிப் பறந்த பாகிஸ்தானில் பல்தேசிய நிறுவனங்கள் சகலரையும் விலைக்கு வாங்கியிருந்தபடியால் இந்தியாவின் வெண்மைப் புரட்சியை அங்கு நிகழ்த்த முடியவில்லை என குரியன் தெரிவித்திருப்பார்.

இங்கு நான் இலங்கை பாகிஸ்தானைப் பற்றி அதிகம் குரியனுடன் தொடர்பு படுத்திக் கூறியது ஒரு காரணமாகத்தான். இந்தியா வெண்மைப் புரட்சியின் மூலம் தன்னிறைவு கண்டுள்ளது. ஏனெனில் பல் தேசிய பால் நிறுவனங்களின் வியாபார மூலோபாயத்துக்குள் சிக்காமல் சுயமாக சிந்தித்து தமது நாட்டின் பால் உற்பத்தி துறைக்கு முன்னுரிமை கிடைக்கும் வகை செய்திருந்தார்கள். அறுபதுகளில் உலக உணவுத் திட்டம் மூலம் கிடைத்த ஒரு தொகை பால் மாவையும் நாட்டின் திரவ பால் கட்டமைப்புக்குள் இணைத்தனரே தவிர மக்களுக்கு நேரடியாக வழங்கி உள்ளூர் பால் துறையை பாதிக்க விடவில்லை.

இன்று கூட பால் மாவை யுத்தம் போன்ற அவசர தேவைக்காகவும் மிதமிஞ்சிய பால் உற்பத்தியை சேமிக்கும் வழியாகவுமே இந்தியா பயன் படுத்துகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடி உதவிக்கும் இந்தியா பால் மாவை வழங்கியிருந்தது குறிப்பிடத் தக்கது. பால் உற்பத்தி குறையும் போது பால் மாவை திரவமாக்கி மக்களுக்கு வழங்குகிறார்கள். இந்திய மக்களும் பால் மாவை விட திரவப் பாலுக்கே பழகியுள்ளனர். பசு மட்டுமல்ல எருமையிலிருந்தும் பால் மாவை இந்தியா உற்பத்தி செய்கிறது. உண்மையில் திரவப் பாலை பெருந்தொகையில் இறக்குமதி செய்ய முடியாது. அதற்கு மக்களை பழக்க வேண்டும். தற்போது இலங்கையை விட பாகிஸ்தான் பாலுற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக பால் மா தொடர்பான பல சாதக பாதக விடயங்களை ஆராய்ந்துள்ளேன். இதன் மூலம் உங்களுக்கு ஓரளவு தெளிவு கிடைத்திருக்கும் என நினைக்கிறேன். எதிர்வரும் வாரங்களில் வேறு ஒரு தலைப்பை ஆராய்வோம்.



(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், கால அவகாசம் இல்லாத அவசர விஷயங்கள் நம்முடைய நேரத்தைத் தொடர்ந்து எடுத்துக்கொண்டே இருக்கும்பட்சத்தில் மேலே சொன்ன முக்கியமான விஷயத்துக்கு இருக்கும் கால அவகாசம் குறைந்துகொண்டே போகும். கடைசியில் அதுவும் அவசரமான ஒன்றாக மாறிவிடும். அதிக சிந்தனை தேவைப்படும் ஒரு விஷயத்தை அவசரமாக செய்தால், வெற்றி கிடைக்க வாய்ப்பில்லை தானே?" என்று கிண்டலாகக் கேட்கிறார் ஆசிரியர். இதற்குக் காரணம், அவசர வேலைகளை நாம் தொடர்ந்து செய்துகொண்டே இருந்தது தான் என்கிறார்.

"ஒரு விஷயம் குறித்து நாம் முடிவெடுக்கும் போது உடனடியாக உருவாகக்கூடிய சாதக, பாதகங்களைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறோம். அதிலும் அவசரம் எனில், கேட்கவே வேண்டாம். நம் பார்வை மிகவும் குறுகலான ஒன்றாக மாறிவிடும்.




குறுகிய பார்வையில் கண்ணுக்குமுன் இருக்கும் பாதகங்களை மட்டும் கையாளக் கூடிய வகையிலான முடிவுகளை எடுப்போம். அப்படி எடுப்பதால் கண்ணுக்குத் தெரியாத பாதகங்கள் மறைந்துவிடா.

கொஞ்சநாள் கழித்து அதை நாம் எதிர்கொள்ளவே வேண்டும். இதனாலேயே நாம் முடிவெடுக்கும்போது உடனடியாகத் தோன்ற வாய்ப்பிருக்கும் சிக்கலை மட்டுமே மனதில் கொண்டு முடிவெடுக்கக் கூடாது. எடுத்த காரியம் நிறைவடையும் வரையில் என்னென்ன சிக்கல்கள் உருவாகும் என்று சிந்தித்து செயல்பட்டால் மட்டுமே காரியத்தில் வெற்றி பெற முடியும்.

1936ஆம் ஆண்டில் ஜான் மெய்னார்ட் கீன்ஸ் எனும் பொருளாதார நிபுணர் ஓர் ஆய்வை செய்தார். செய்தித்தாள் வாசகர்களிடம் 100 பெண்களின் புகைப்படம் காட்டப்பட்டது. இந்தப் பெண்களில் அதிகமான மக்களால் விரும்பப்படும் ஆறு பெண்களைத் தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்ததுக்கான காரணத்தைக் கூற வேண்டும் என அறிவிக்கப்பட்டது. சாமானிய வாசகர்கள் வரிந்து கட்டிக்கொண்டு அவரவர்களுக்கு அழகாகத் தோன்றும் ஆறு பெண்களின் புகைப்படங்களைத் தேர்வு செய்தனர். '100 பெண்களில் இந்த ஆறு பெண்கள்தான் எனக்கு அழகானவர்களாகத் தெரிகிறார்கள்' எனக் காரணத்தைக் கூறியிருந்தார்கள்.

போட்டியின் தன்மையை யாரும் புரிந்துகொள்ளவில்லை. அதிகமான மக்கள் விரும்பும் ஆறு பேரைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற கோணத்தில் போட்டியில் கலந்துகொண்டவர்கள் யாரும் சிந்திக்கவில்லை. தனக்கு அழகாகத் தெரிபவர்கள் என்ற கோணத்தில்தான் அனைவரும் சிந்தித்துள்ளார்கள். சரியான கோணத்தில் சிந்திக்கும்போதுதான் சரியான முடிவுகள்




கிடைக்கும்" என்கிறார் ஆசிரியர்.

"இன்றைக்கு எடுக்கும் முடிவு குறித்து எதிர்காலத்தில் நாம் என்ன நினைப்போம், வெற்றி பெற்றாலும் தோல்வி அடைந்தாலும் நாம் வருந்துவோமா? அல்லது இவையெல்லாம் சாதாரணம் என்று கடந்து போவோமா? என நாம் சிந்தித்தே முடிவெடுக்க வேண்டும். எந்த முடிவெடுத்தால் எதிர்காலத்தில் வருத்தம் குறைவாக இருக்குமோ, அதை எடுப்பதே சிறந்ததாக இருக்கும்" என்கிறார் ஆசிரியர். முடிவெடுப்பது குறித்த அடிப்படை விஷயங்களை எளிய நடையில் சொல்லும் இந்தப் புத்தகத்தை அனைவரும் படித்துப் பயன்பெறலாம்!



# வியாபார விபரீதங்கள்

- ஏ.ஜே.ஞானேந்திரன் -




வெறும் பொழுது போக்கிற்காக என்றிருந்த விளையாட்டுக்கள், இன்று “பணம் காய்ச்சி மரங்களாக“ விஸ்வரூபம் எடுத்திருப்பது , இன்றைய வாழ்வியலில் ஓர் அதிரடியான மாற்றம் என்று சொல்லலாம், உலக நாட்டு வீரர்களுக்கு வலைவிரித்து, லீக் போட்டிகளை நடாத்தி, இன்று மில்லியன் கணக்கான டாலர்களால் , ஏற்பாட்டாளர்களை குளிப்பாட்டிக் கொண்டிருக்கும், ஐபில் கிரிக்கெட் போட்டிகளை விட வேறு சிறந்ததோர் உதாரணம் இருக்க முடியாது.

நிலத்துக்கு அடியில் உள்ள எண்ணெய், வற்றாத அமுத சுரபி அல்ல என்பதை வளைகுடா நாடுகள் நன்றாகவே புரிந்து கொண்டிருக்கின்றன. எண்ணெய் வருமானத்தை வேறு துறைகளில் முதலிட்டால்தான், நாம் பிழைத்துக் கொள்ளலாம் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டு தடாலடியாக என்றோ செயற்பட ஆரம்பித்து விட்டார்கள்.

ஐந்து பிரபல்யமான ஐரோப்பிய காற்பந்தாட்டக் கழகங்கள் .எண்ணெய் பணத்தில்“ வளைகுடா நாடுகளுக்கு விலை போயிருக்கின்றன. இதில் முன்னிற்பது ஐக்கிய அரபு எமிரேட்.

இங்கிலாந்தின் புகழ்பெற்ற காற்பந்தாட்டக் கழகங்களை வாங்க முற்பட்டு, இவர்கள் வேட்டை என்றோ ஆரம்பமாகி விட்டது. 2008இல், அதாவது 15 வருடங்களுக்கு முன்பே, மான்செஸ்டர் கழகத்தை வாங்குவதில் வெற்றி கண்டது அபுதாபி.

அவர்கள் இட்ட முதற் “பிள்ளையார் சுழி “இதுதான்! (இன்று அந்தக் கழகம் அவர்கள் கையில் இல்லை) அடுத்த ஒரிரு ஆண்டுகளில் பிரான்ஸின் புகழ்பெற்ற “பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் “அணியை வாங்கியது கத்தார் ஸ்போர்ட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனம். 2022 கால்பந்து உலகக் கோப்பையை நடத்தும் உரிமத்தைப் பெறுவதற்கு உலக அளவில் பல்வேறு பிரச்சினைகள் முளைவிட்டாலும், கத்தார் அசரவில்லை.

இதோடு விட்டதா கத்தார்?

அடுத்த 10 ஆண்டுகளுக்கு கத்தார் மண்ணில்தான் “கிராண்ட் ப்ரீ“ என்ற கார்




ஓட்டப் பந்தயங்கள். நடக்கவிருக்கிறது. 2023இல் மன்செஸ்டர் யுனைட்டெட் கழகத்தை விலைக்கு வாங்கவும் போட்டியிட்டது. ஆனால் முடியவில்லை

அட என் பங்கிற்கு எதுவும் செய்யவில்லையே. எங்கெங்கோவெல்லாம் விலைபோவது என் மண்ணில் விலைபோகவில்லையே என்ற ஆதங்கத்தில், அதிரடியாக பிரீமியர் லீகின் “நியூகாசில் யுனைடட் “அணியை வாங்கியது சவுதி அரேபியா!

காற்பந்தாட்ட நட்சத்திரமான கிறிஸ்டியானோ ரொனால்டோ சவுதி அரேபியாவின் அல் நசர் அணிக்கு, ஆண்டுக்கு சுமார் 200மில்லியன் ஊதியத்தில் விலைபோன செய்தி, விளையாட்டு உலக அதிர வைத்தது. ஐரோப்பிய லீக் போட்டிகளுக்கு இணையான பலத்துடன் தம் அரபு லீக் போட்டிகளை மாற்றும் முனைப்பில், நெய்மார் உட்படப் பல நட்சத்திர வீரர்களை சவுதி விலைக்கு வாங்கியுள்ளது.

உலகச் சந்தையில் விளையாட்டுகள் எப்படி எப்படியெல்லாம் விலைபோகின்றன என்பது ஒரு பார்வையாளராக இப்பொழுது உங்களுக்கு நன்றாகவே புரிந்திருக்கும். எண்ணெய்ப் பணத்தில் புரளும் சவுதி இத்துடன் நிறுத்துவதாயில்லை.

இன்று உலக நாடுகளை கவர்ந்திழுக்கும் இந்தியாவின் ஐபிஎல் கிரிக்கெட் லீக் போட்டிகளின் அடிமடியில் கைவைக்க இருக்கின்றது. சமீபத்தில் இந்தியா வந்திருந்த சவுதி இளவரசர், 500 கோடி அமெரிக்க டாலர் அளவில், “ஐபிஎல்“இல் முதலிட விரும்புவதைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார்…




விளையாட்டுக்கள் வியாபார உலகில் விலைபோகும் கோலம் நிதர்சனமாகவே தெரிகின்றது..பணநாதன் குணநாதனல்ல… விளையாட்டுகள் விபரீதமாகாத வரை, பார்த்து இரசிப்பவருக்கு விருந்துதான்.

ajgswiss@gmail.com

-நிறைவு-



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

சீனி எண்டது நாங்கள் கருப்பஞ்சீனி பனஞ்சீனி தென்னம் சீனி எல்லாத்துக்கும் பொதுவாகச் சொல்லுறாங்கள்.

உதை விட ஊரில நாங்கள் முந்தி ஆம்பிளையளின்ரை ஆணுடம்பை அதாவது ஆண்குறியையும் சீனி எண்டு சொல்லுறனாங்கள். இப்ப அப்பிடிச் சொல்லுறவையை நாகரீகம் இல்லாதவை எண்டுகினம். முந்தி ஆம்பிளைப் பிள்ளையள் உரிஞ்சாங்குண்டியளா நிக்கேக்கை அப்பிடித்தான் நிக்கிறதுகள் கிழுடு கட்டை எங்க எங்கட பிள்ளையின்ரை சீனியைக் காணேல்லை. காகம் கொத்திக் கொண்டு போட்டுதோ எண்டவும் அதுகள் கையால சீனியைப் பொத்திக்கொண்டு கெக்கே பெக்கே எண்டு சிரிக்குங்கள். அதைப் பார்த்து வீட்டில இருக்கிற எல்லாரும் சிரிச்சு சந்தோசமாய் இருப்பினம்.

நிலம் பெயர் புலம் பெயர் வாழ்க்கையில துலைஞ்சு போன சந்தோச விளையாட்டுகளில இதுகும் ஒண்டு.

அகராதியில பாத்தம் எண்டால் மரத்தால செய்த நங்கூரம் எண்டு பொருள் குடுத்திருக்கு. இப்ப பாவனையில இருந்து காணாமப் போட்டுது. நட்டுக்கொண்டு நிக்கிறதாலதான் அதுக்கும் சீனி எண்டு சொல்லுறதாக்கும் எண்டு முந்தி ஒருக்கா அப்பு சொன்னது ஞாபகம் வருகுது.

சீன வெடியை சீனி வெடியெண்டும் அகராதியில போட்டுக்கிடக்கு. இரத்தத்தில சீனி கூடின ஆக்களை சீனி வருத்தக்காறர் எண்டு சொல்லுறது வழக்கம். எங்கட அப்பு ஆச்சி காலத்திலை இப்ப சின்னன் பொன்னன் எல்லாத்துக்கும் அள்ளுகொள்ளையா இருக்கிறமாதிரி உந்த கோதாரி பிடிச்ச வருத்தம் அப்ப இருக்கேல்லை. எங்கினேக்கையும் அருப்புத் துருப்பா ரெண்டொருத்தருக்குத் தான் பரம்பரைப் பிழையாலை வந்தது.

அவை அப்ப கண்ட கிண்ட எடுப்புச் சாப்பாடுகளையும் தின்னாததும் உடம்பை வளைச்சு வீட்டு வேலை காணி பூமி வேலை எண்டு உழைச்சதாலயும்தான் அவைக்கு உந்த வருத்தம் வாறேல்லை எண்டுவா ஆச்சி. சீனி வருத்தக்காறர் டாக்குத்தரிட்டை கிளினிக்குக்குப் போனால் என்ர சீனி எப்பிடி இருக்கெண்டு ஒருக்காப் பாத்துச் சொல்லுங்கோ எண்டு எந்த விகல்ப்பமும் இல்லாமைக்கேப்பினம். ஆரும் பிழையா விளங்கிறேல்லை.

அவை போற வாற இடங்களில சீனி இல்லாமைத்தான் தண்ணி வென்னி குடிக்கிறவை. ஆற்றையும் வீட்டை போனா சீனி இல்லாமல் தேத்தண்ணி தாங்கோ எண்டுவினம்.

உங்க வெளிநாடு வழியை ஆரும் வீடு வழியை போனா வித் சுகரோ வித்தவுற் சுகரோ எண்டு கேப்பினம்.

வித் சுகரெண்டால் வன் ஸ்பூனோ ரூ ஸ்பூனோ எண்டு கேப்பினம். அதை ஒரு வழக்கமா அங்கை வைச்சிருக்கினம். இஞ்சையும் இப்ப தேத்தண்ணிக்கடை வழியை சீனியைப் புறம்பாத்தட்டில வைச்சுக் குடுக்க வெளிக்கிட்டிட்டினம்.



உந்த சீனிக்கதை கதைக்கேக்கை முந்தி தொண்ணூறுகளிலை நான் கிளிநொச்சியில படிப்பிக்கேக்கை நடந்த ஒரு சம்பவம் இண்டைக்கும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்குது.

முந்தி நாங்கள் செமினார்களுக்கு மோட்டச்சயிக்கிளிலதான் ஓ மந்தை தாண்டிக்குளம் தாண்டி வவுனியாவுக்குப் போறனாங்கள். அப்பிடிப் போகேக்கை வழி வழியை இருக்கிற தேத்தண்ணிக் கடை வழியை தேத்தண்ணி இல்லாட்டில் பால் குடிப்பம்.

உப்பிடித்தான் நாங்கள் கொஞ்சம் பேர் அதிகாரியள் உட்பட உப்பிடி ஒரு செமினாருக்குப் போகேக்கை புளியங்குளத்தில ஒரு அப்புவும் ஆச்சியும் நடத்தின தேத்தண்ணி கடையில தேத்தண்ணி குடிக்க நிப்பாட்டினனாங்கள்.

அங்கதான் வழக்கமா நிப்பாட்டிறனாங்கள். ரெண்டு காரணங்கள். ஒண்டு அங்க பெரிய கிளாஸ் நிறையத்தாற சுண்டக்காய்ச்சின பசுப்பால் வலு உருசை.

ரெண்டாவது வயது போனவைக்கு ஒரு வரும்படி கிடைக்கும் எண்ட எண்ணம்.

உப்பிடி அண்டைக்கு எங்களோட வந்த மூண்டு பேர் சீனி வருத்தக்காறர். அப்ப அவைக்கு சீனி இல்லாமல் மூண்டு பால் ஆச்சியிட்டைச் சொன்னம். பாலை ஊத்திக் கொண்டு வந்த ஆச்சி அந்தச் சீனி இல்லாத ஆக்கள் மூண்டு பேரும் ஆரெண்டு கேட்டதை இண்டைக்கு நினைச்சாலும் கெக்கட்டம் போட்டுச் சிரிப்பன்.

இப்பவும் இதை எழுதேக்கை சிரிக்க வீட்டம்மா பாத்துப் போட்டு என்ரை தலையில ஆண்டவன் இப்பிடி தன்ர பாட்டில இருந்து சிரிக்கிறவனோட சீவியெண்டு எழுதிப்போட்டானே எண்டு கொண்டு போறா...

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.11.2023இல் வெளியிடப்பெற்றது.